விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 17 வெள்ளிக்கிழமை (02.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 319

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜூரி ஆணைக்குழு இலங்கைக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நீதித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது என்று சர்வதேசஜூரிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மைக்காலமாக நீதித்துறைக்கும் எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சட்டத்துறை மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (19ஆம் பக்கம் பார்க்க)

## 23 வயதுப் பெண்ணுக்கு ஒரே சூழில் 5 சிசுக்கள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலை யொன்றில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் ஒரே சூழில் ஐந்து சிசுக்களைப் பிரசவித்துள்ளார்.

23 வயதுடைய பெண்ணொருவரே 5 சிசுக்களைப் பிரசவித்துள்ளார். இதில் மூன்று பெண் சிசுக்களாகும்.

இதேவேளை, கேகாலையைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே சூழில் ஐந்து சிசுக்களையும் கண்டியைச் சேர்ந்த மற்றொரு பெண் 3 சிசுக்களையும் அண்மையில் பிரசவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கையில் மனித உரிமைகளை அரசாங்கம் மேம்படுத்துகின்றது

## ஐ.நாவில் எடுத்துரைப்பு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பித்த பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கை குறித்த விவாதத்தின் தொடக்கத்தில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, இலங்கை அரசு மனித உரிமைகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)




## போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி ஓரேநாளில் 50 ஆயிரம் எஸ்.எம்.எஸ்

### சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் சர்வதேச சுயாதீன விசாரணை நடைபெற வேண்டுமென ஆதரவு கோரிகை யெழுத்து பெறும் நடவடிக்கையில் இந்தியாவில் உள்ள சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்டு வருகிறது.

குறித்த நடவடிக்கை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 24 மணி நேரத்தில் 50 ஆயிரம் எஸ்.எம்.எஸ் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புக்களும் கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சுமார் ஒரு கோடி கையெழுத்துக்களைப் பெற்று, அதனை ஐ.நாவில் சமர்ப் (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் மீது குற்றஞ்சாட்டி அவரை பதவியில் இருந்து அகற்ற வழி செய்யும் தீர்மானம் ஒன்றை ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர்.

நாட்டின் முதல் பெண் தலைமை நீதிபதிக்கு எதிராக எடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கான காரணங்கள் என்ன என்பதை அரசு விளக்கவில்லை.

அதேநேரம் தலைமை நீதிபதி ஷிரானி பண்டாரநாயக்காவை பதவியில் இருந்து அகற்ற வழிசெய்யும் இந்தத் தீர்மானத்தை ஆளும் கூட்டணியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் நாடாளுமன்ற சபாநாயகரிடம் கொடுத்துள்ளனர். இதில் 120 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

பிரதம நீதியரசரின் நடத்தையும் செயற்பாடும் நாட்டு மக்களின் இறைமையை பாதிப்பதாக அரசின் சார்பில் பேசவல்ல அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தீர்மானத்தில் என்ன கூறப்பட்டுள்ளது என்பது குறித்து விபரங்களை தற்போதே வெளியிடுவது சரியாக இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த இரான் விக்கிரமதுங்க இது குறித்துக் கருத்துக் கூறுகையில் அரசியல் அமைப்பு ரீதியான சர்வாதிகாரத்தை நோக்கி இலங்கை செல்வதையே இந்த முடிவு காட்டுவதாகக் கூறியுள்ளார்.

செப்டம்பர் மாதத்தில் வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒரு நிதியை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் (19ஆம் பக்கம் பார்க்க)

# உரிய புகழ் கிடைக்காததால் கவலையடைந்தார் கோத்தபாய



## விக்கிலீக்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமக்கு உரிய புகழ் கிடைக்கவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார் என விக்கிலீக்ஸ் இணையம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

# மனிதவுரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும்!

## அமெரிக்கா வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

மனித உரிமை மீறல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உலக கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருகின்றன.

காணாமல் போதல்கள், கொலைகள், கருத்துத் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம்

### தண்ணீர் போத்தல்வரை சென்ற திவிநெகும தொடர்பான விவாதம்

(யாழ்ப்பாணம்)

திவிநெகும தொடர்பில் யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர், ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றதோடு தண்ணீர் போத்தலினால் தாக்குதல் மேற் கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்டத்தின் ஒத்திவைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இணைத்தலைமையில் நேற்று இடம் பெற்றது. (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## திருடமுயன்ற இளைஞன் கைது

வீட்டுக்குள் புகுந்து திருட முயன்ற இளைஞன் ஒருவரை அவ்வூர் மக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் பருத்தித்துறை வல்லிபுர பரிகாரியார் வீதியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வீட்டின் பின்புறத்தில் குறித்த வீட்டுப்பெண் வேலையில் ஈடுபட்டிருந்தபோதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (எ-11,24)


## வேலையாள் தேவை

நெல்லியடி பிரதான வீதியில் இயங்கும் பார்மசி ஒன்றுக்கு மாலை 6.30 மணி வரை வேலை செய்யக்கூடிய A/L படித்த பெண்பிள்ளை தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-

0213201751, 0770238140

(875)


# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான பெண் மேல்நீதிமன்றால் விடுதலை

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து ஆயுதப்பயிற்சி பெற்று இராணுவத்திற் கெதிராக தாக்குதல் நடத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குரும்பசிட்டி தெல்லிப்பழையினை சேர்ந்த நவரட்ணம் நவந்தினி (வயது 34) என்ற பெண் யாழ்.பொலிகண்டிப்பகுதியில் 1993-1996 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ். பொலிகண்டியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து இராணுவத்தினருக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்டு 2009 ஆம் ஆண்டு மே மாதம் இறுதிக்கட்ட போரின்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

பூசா முகாமில் இருவருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இவ்வருடம் மே மாதம் 22-ம் திகதியன்று இவரினால் வழங்கப்பட்டதாக கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை ஒரு சான்றாக வைத்து யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப் பட்டது.

குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் குறித்த பெண்ணை வலுக்கட்டாயப்படுத்தியே பெறப்பட்டது என கூறப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றினால் கடந்த ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டு வேறு ஏதேனும் சான்று பொருள் உள்ளனவா என ஆராய்வதற்காக நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜே. லிங்கநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த பெண்ணின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கப்பால் நிரூபிக்கப் படாமையால் குறித்த பெண்ணை நிரபராதி எனக் கண்டுவிடுதலை செய்தார்.

மேலும் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை ஒரு சான்றாக கொண்டு வவுனியா நீதிமன்றிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் அவ் வழக்கிலிருந்தும் விரைவில் விடுதலை பெற முடியும் என அவரது சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி மு.றெமிடியாஸ் தெரிவித்தார். (எ-4)

## வாள்வெட்டில் இருவர் படுகாயம்

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாடு மோதலில் முடிந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் நாவலர் வீதி ஐந்துசந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கே.எம்.ஜெமீன் (வயது 50), எஸ். நிசாந் (வயது 31) ஆகியோரே படுகாய்மடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-11)

## வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கும்

தீபாவளி தினத்தை முன்னிட்டு நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தகவிடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ், வர்த்தகர்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (எ-9)


## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




10.30
2.30
6.30

விரைவில் விஜயின் துப்பாக்கி

30.10.2012 முதல் A/C

D.T.S


## கண்ணீர் அஞ்சலி



வரணி இடைக்குறிச்சி சர்வோதயா முன்பள்ளி ஆசிரியர் ஜீவிதா அவர்களின் அன்புத் தந்தை

**இராசா சிதம்பரநாதர்**

அவர்கள் 29.10.2012 இறைபதம் அடைந்தமையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1420) தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர் சங்கம்


## வீடு வாடகைக்கு உண்டு

அரசடி வீதியில் மாடி வீடு வாடகைக்கு கொடுக்கப்படும். [தனியார் நிறுவனத்திற்கு மட்டும்]

தொடர்பு:-

282, அரசடி வீதி,
நல்லூர்.

072 2058854, 072 2928781

(870)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சவுந்தரம் (குமார் அம்மா)



காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும், கொண்ட வேலுப்பிள்ளை சவுந்தரம் அவர்கள் 01.11.2012 நேற்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சின்னம்மா அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும், தவமலர், தவக்குமார், காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், சரஸ்வதி, தவமணி, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உலகேஸ்வரன் (ஈசன்), நவமணிதேவி ஆகியோரின் அன்பு மாமியும், சுகந்தன், சுகன்யா, கௌசிகன், கரன், சுதன், கோபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல.08, ஆடியபாதம் வீதி, கொக்குவிலில் இடம்பெறும்.

ஈமக் கிரியைகள் தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 08, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மகன் - தவக்குமார் (குமார்)

(880)


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

Nov 2012-Apr 2013

தமிழ் மொழி மூலம்

- Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
- Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
- Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
- Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
- Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
- Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
- Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
- Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

(C-1418)


## வலி தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் 2012

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப்பந்தகாரர்கள் அறிவுறுத்தலில் உள்ள வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 02.11.2012 - 08.11.2012 பி.ப. 02 மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 09.11.2012 நண்பகல் 12 மணி வரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 09.11.2012 பி.ப. 2.00 மணி
   (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு **தவிசாளர், வலி தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்** என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை **பிராந்திய உ.உ.ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலத்திற்குள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
7. மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | வேலை விபரம் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிப்பு) | கேள்விப் பத்திரக் கட்டணம் | Vat |
|---|---|---|---|---|---|
| 01 | கனல் வடிகால் புனரமைப்பு மாதகல் கிழக்கு மாதகல் | C8 | 22500.00 | 1000.00 | 142.40 |
| 02 | வடலியடைப்பு ஒழுங்கை அமைத்தல், வைத்தியசாலை வீதி. | C8 | 25000.00 | 1000.00 | 142.40 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன்
தவிசாளர்
வலிதென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்
01.11.2012

(C-1421)


## ஓர் அரிய சந்தர்ப்பம்

சர்வதேச வர்த்தகக் கம்பனியான Direct Marketing International உடன் கைகோர்க்க ஓர் அரிய வாய்ப்பு. உலகளாவிய ரீதியில் 67 நாடுகளில் கால் தடம் பதித்திருக்கும் இக்கம்பனியில் இணைய வெறும் 6 மாதகால பயிற்சிநெறியே போதுமானது. 3 வருட அனுபவமுள்ள முகாமையாளர்கள் மூலம் வழங்கப்படும் இப்பயிற்சிநெறிக்கு எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக இச் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பயிற்சிக் காலத்தில் தங்குமிடம் இலவசமாக வழங்குவதோடு, உங்கள் செலவுகளுக்காக மாதாந்தம் ரூ.6,000/-இற்கு குறையாத பணமும் வழங்கப்படும்.

**பயிற்சி முடிவில் கிடைக்கும் நன்மைகள்**

- ரூ. 35,000/- சம்பளத்துடன் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேவைாய்ப்பு (எவ்வித பரீட்சையுமின்றி....)
- ஓர் சர்வதேச வியாபாரமொன்றிற்கு உரிமையாளராகும் வாய்ப்பு

**இணைவதற்கு தேவையான தகுதிகள்**

- O/L, A/L சாதாரண கல்வி பயின்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம் சாதாரணமாக வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.
- 18 - 32 வயதெல்லைக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

20 பேர் மாத்திரமே தேவையாக உள்ளபடியால் உடனடியாக அழைக்க வேண்டிய இலக்கம்

0772- 151014, 021-7212045.

(879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# அதிக நாள் வாழ....

"இவ்வுலகில் நீண்ட நாட்களுக்கு வாழ வேண்டும் என ஆசைப்படுகிறேன்" என்று ஒருவர் கூறினார். இது அவருக்கும் துன்பம்... அடுத்தவர்களுக்கும் துன்பம் என்பதனை அவர் புரிந்து கொள்ளவில்லை போல இருக்கிறது. இருந்தாலும் இப்படியொரு ஆசை எல்லோருக்கும் இருக்கத்தான் செய்கிறது.

அதனால்தான் இது தொடர்பாக ஒருவர் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார்.

அதன்மூலம் மனிதனுடைய ஆயுள் குறைவதற்கு காரணமாக இருக்கிற விடயங்கள் என்ன? என்பதை கண்டுபிடித்தார்.

அந்த ஆராய்ச்சியை எப்படி செய்தார் தெரியுமா? சுமார் 700 பேரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களின் பழக்கவழக்கங்களை ஆராய்ந்தார். அதன்மூலம் ஒரு முடிவுக்கு வந்தார்.

மனித உடலை பாதித்து ஆயுளைக் குறைக்கக் கூடிய ஏழு விடயங்களை அவர் கண்டுபிடித்தார்.

அவர் சொன்ன ஏழு விடயங்களும் வருமாறு;

உடற் பயிற்சி இல்லாது இருப்பது முதல் காரணம்.

மிகவும் பருமனாக இருப்பது இரண்டாவது காரணம்.

இவை இரண்டும் மிகவும் மோசமான விடயங்கள். இதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம் .

மூன்றாவது விடயம் புகைப்பிடிப்பது.

நான்காவது விடயம் அளவிற்கு மீறிக் குடிக்கிறது.

சரி... இவற்றிற்கெல்லாம் அடுத்ததாக அவர் கூறிய விடயம்தான் எல்லோருக்கும் மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அதாவது... அதிகநேரம் தூங்குவது... மற்றையது சாப்பாட்டு நேரத்தை தவிர்ந்த ஏனைய நேரங்களில் எதையாவது கொறித்துக் கொண்டே இருக்கிறது.

அடுத்ததாக காலையிலே ஆகாரம் எதுவும் சாப்பிடாமலும் இருக்கிறது. இந்தப் பழக்க எல்லாம் ஆயுளையும் குறைத்து விடும் என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், அந்த ஆராய்ச்சியாளர் இன்னொரு காரியம் செய்தார். ஏற்கனவே பரிசோதனைக்கு உட்படுத்திய 700 பேரைத் தேடி இருபது வருடங்கள் கடந்த நிலையில் சந்தித்தார். அவர்களில் பலபேர் அப்போது இறந்துவிட்டார்கள்.

அப்படி இறந்து போனவர்கள் எல்லோரும் ஏற்கனவே கண்டு பிடித்துக் கூறிய அந்த ஏழு பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டவர்கள்.

அதன் பின்னர்தான் அவர் கூறியவற்றை எல்லோரும் புரிந்து கொள்ள ஆர ம்பித்தார்கள். அதனால் நாமும் அந்த ஏழு விடயங்களையும் மனதிலே வைத்துக் கொள்வது நல்லது.

ஒரு வயதான தாத்தா புகைவண்டியிலே பயணித்துக் கொண்டிருந்தார். பல்லு இல்லை .கன்னத்திலே குழி விழுந்திருந்தது. கண்கள் இரண்டும் உள்ளே பதுங்கி இருந்தன. கண்ணாடி போட்டிருந்தார்.

புகைவண்டி ஆசன இருக்கையின் அவருக்கு எதிரிலே இருந்த ஒருவர் அவரைப்பார்த்து "தாத்தா இந்த வயதிலேயும் இப்படித் தனியாக பிரயாணம் செய்வதைப் பார்க்கும் போது... எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. ஆயுளைக் குறைக்கக்கூடிய ஏழு விடயங்களும் உங்களிடம் இல்லையென்று நினைக்கிறேன்" என்றார்.

அந்தத் தாத்தா நிமிர்ந்து பார்த்தார். "யார் சொன்னது அப்படி...? என்னிடம் அனைத்து கெட்ட பழக்கமும் உள் ளது. சிகரெட், சாராயம் என்பவற்றில் அதிகம் நாட்டம். நீங்கள் கூறிய விடயங்கள் அனைத்தும் பொருந்தாது" என்றார்.

இவர் மிகவும் ஆச்சரியப்பட்டு போனார். "அப்படியென்றால்... இப்போது உங்களின் வயது என்ன தாத்தா?" என்றார்.

அவர் நிமிர்ந்து இவரைப் பார்த்து... "இந்த டிசெம்பர் மாதம் வந்தால் இருபத்து நான்கு" என்று கூறினார்.

இவர் திகைத்து போனார். எதுவுமே பேசாது அமைதியானார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# இலங்கை தமிழர்களை காப்பாற்ற நம்மால் முடிந்த பணியை தொடருவோம்

## கருணாநிதி தெரிவிப்பு

இலங்கை தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் காப்பாற்றும் பணியை தொடருவோம் என்று கருணாநிதி கூறியுள்ளார். இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியவை வருமாறு,

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவும் நேற்று முன்தினம் விடியற்காலையில் அமெரிக்காவுக்கு டெசோ இயக்கம் சார்பாக தி.மு.க. தூதுவர்களாக புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். அமெரிக்காவில் ஐ.நா.சபையில் அவர்கள் அளித்திட இருக்கிற அறிக்கை நகல்களையும் சி.டி.போன்றவற்றில் எனக்கு ஒரு பிரதியை வழங்கிச் சென்றார்கள்.

நானும் டெசோ உறுப்பினர்களும் அமர்ந்து விவாதித்து தக்க திருத்தங்களை செய்து மிகுந்த கவனத்தோடு தயாரிக்கப்பட்ட அறிக்கைதான் அது.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக நேற்று முன்தினம் அமெரிக்கா பயணம் மேற்கொள்ள என்னிடம் விடைபெற்றுக் கொண்டனர்.

தமிழக அரசின் எதிர்ப்புக்கிடையில் மிகச் சிறப்பாக நடத்திய டெசோ மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்களை வடித்தெடுத்தோம். அந்தத் தீர்மானங்களை ஐ.நா. மன்றத்தில் இந்தியா கொண்டு செல்ல வேண்டுமென்று பிரதமருக்கு கடிதமும் நான் எழுதினேன். கடிதத்தை பிரதமரிடம் கடந்த ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு பிரதமர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்ததோடு ஏற்கனவேஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா நமது வேண்டுகோளை ஏற்று ஆதரித்தது என்பதையும் நினைவு கூர்ந்தார்.

என்னுடைய கடிதத்திற்கு பதில் எழுதிய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைத் தமிழர் களின் நலனுக்கும் நல்வாழ்வுக்கும் தேவையான பணிகளில் இந்திய அரசு அக்கறை காட்டி வருகிறது என்றும் ஈழத் தமிழர்களின் மீள்குடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கு இந்திய அரசு மிகுந்த முன்னுரிமை வழங்கிசெயற்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும் அதிகாரப் பகிர்வு குறித்து ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதன் அவசியத்தையும் இலங்கை அரசுக்கு தெரிவித்திருக்கிறோம் என்றும் எதிர்காலத்தில் ஈழத்தமிழர்கள் சம உரிமை, கௌரவம், சம நீதி மற்றும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய நிலையை உருவாக்கிட இலங்கை அரசுடன் இந்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

இலங்கைத்தமிழர் வாழ்வில் அமைதியும் அனைத்து ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டுமென்று உலகத் தமிழர்கள் எல்லாம் விரும்புவதை போலவே நாமும் பெரிதும் விரும்புகிறோம். ஆனால், நமது தமிழர்களிலேயே ஒரு சிலர் இனப் பகைவர்களை எதிர்க்கிறார்களோ இல்லையோ நம்மை எதிர்ப்பதில்தான் இன்பம் காணுகிறார்கள்.

சிலர் என்னை தூற்றுகிறார்கள் என்பதற்காக நான் என்றைக்கும் வருத்தப்பட்டதில்லை. என்னை இப்போது தூற்றுகிறவர்கள் எல்லாம் முன்பு என்னைப் பாராட்டியவர்கள் தான். நாளை மீண்டும் என்னை பாராட்டப் போகின்றவர்கள் தான். இங்கேயுள்ள தமிழர்களை மட்டுமல்ல இலங்கைத் தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் உணர்வுபூர்வமாக காப்பாற்றவும் அவர்களை முன்னேற்றவும் நம்மால் முடிந்த பணிகளை முனைப்புடன் தொடருவோம் என கருணாநிதி அதில் கூறியுள்ளார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 190 | 75 | 90 |
| உருளைக்கிழங்கு | 120 | 105 | 110 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 100 |
| தக்காளி | 90 | 50 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 90 | 60 | 90 |
| கரட் | 80 | 80 | 200 |
| பூசணி | 30 | 35 | 50 |
| புடோல் | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 40 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 90 | 100 | 150 |
| லீக்ஸ் | 120 | 70 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 40 | 60 |
| போஞ்சி | 110 | 80 | 200 |
| கத்தரிதம்புள்ள | 140 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30-35 |

## இராசி பலன்

*02.11.2012*
*(ஐப்பசி 17, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*திருதியை காலை 7.40 மணிவரை*
*ரோகினி முற்பகல் 10.49 மணிவரை*
*இராகுகாலம் 10.34-12.04 மணிவரை*
*சுபநேரம் 6.04-7.34 மணிவரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்.*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணை புரிவர், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் தோன்றும்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது, எங்காவது வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்கலாம், சஞ்சலங்கள் கூடும்.

**கடகம்** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தொட்ட காரியங்கள் துளிர்விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணி புரிந்து பிறரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**கன்னி** பற்றாக்குறை அகன்று பண வரவு கிடைக்கும் நாள், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்** வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது, கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையால் உற்சாகம் அடைவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவர்.

**மகரம்** பிள்ளைகளால் பெருமைகள் சேரும் நாள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் ஏற்படும், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், பணப்புழக்கம் இருந்த போதிலும் திடீர் விரயங்களும் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பிரயாண நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கல்லூரியில் நீச்சல் பயிற்சி முகாம்

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தில் மாணவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

இவ் இலவச நீச்சல் பயிற்சியானது அனுபவம்மிக்க நீச்சல் பயிற்சியாளர்களினால் வழங்கப்படவுள்ளது. வடமாகாணகல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான நீச்சல் சுற்றுப்போட்டித்தொடர் பயிற்சி முகாம் தொடர்ந்து குறுகிய காலத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகமானது புதுப்பொலியுடன் அதிகளவானவர்களின் பாவனைக்குட்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் மாணவர்களிடையே நீச்சல் போட்டியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் நீச்சல் போட்டிக்கு தயார்ப்படுத்தும் வகையிலும் இந்நீச்சல் சுற்றுப்போட்டியானது இடம்பெறவுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார். (அ-9-21)



நன்றி:-மிரர்.

# ஊடகக்கல்வி கருத்தரங்கு

(சித்தன்கேணி)

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் பத்திரிகை சபையும் இணைந்து நடத்தும் பாடசாலையில் தொடர்பாடல் ஊடகக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக் கருத்தரங்கில் **ஊடகமும் சமூகப்பொறுப்பும்** எனும் தலைப்பில் செய்தி சேகரிப்பின் போது ஊடகவியலாளர் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பத்திரிகைசார் ஒழுக்கவிதிகளும் ஒழுக்கக் கோவைகளும் தொடர்பான விளக்கமும் அளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை பத்திரிகை சபையின் நிறைவேற்று பணிப்பாளர் இம்ரான் புர்கான், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு சபையின் முறைப்பாட்டு உத்தியோகத்தர் எம்.எஸ்.அமீன் ஹிசைன், டெய்லி மிரர் பத்திரிகையின் ஆலோசகர் எஸ்.எம்.எஸ்.ஜயூப் ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கவுள்ளனர். (அ-9-17)




# தரம்-06 அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்

(மல்லாகம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2013 ஆம் ஆண்டிற்கான தரம் 6இல் மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 6 இல் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான புலைமைப்பரிசில் வெட்டுப் புள்ளியாக 110 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் வரையறுக்கப்பட்ட மாணவர் தொகையினர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதனால் வெட்டுப் புள்ளிக்கு குறைந்த மாணவர்களுக்கு உள்ளகப் பரீட்சை மூலம் வரையறுக்கப்பட்ட மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்குமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ-9-21)

# வங்கியின் இலாபங்கள் மூலம் அபிவிருத்தி இடம்பெறுகிறது

## இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

வடமாகாணத்திலேயே இலங்கை வங்கி அதிக இலாபம் ஈட்டுகின்றது என இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் கே.தர்மசிறி தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சி (எஸ்.எம்.ஈ) வங்கிச் சேவை அலகு நேற்று பிற்பகல் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எமது வங்கி 1912 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்டங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர கடன் வழங்கும் அலகுகளை அமைத்து வருகின்றது.

அதன் அடிப்படையில்தான் 8 ஆவது கிளையாக யாழ்ப்பாணத்தில் இவ் அலகு திறந்துவைக்கப்பட்டுள்ளதோடு இன்றைய தினம் அம்பாறையிலும் திறந்து வைக்கவுள்ளோம். ஏதாவதொரு தொழில் முயற்சி அல்லது தொழில் முதலீட்டுக்கான கடன் வழங்கும் பங்கு எமக்கு உண்டு.

அந்த வகையில் குறைந்த வட்டியில் கடன்களை பெற்று தமது தொழில்களில் முதலிட முடியும். எமது வங்கி ஆரம்பிக்கப்பட்டு 73 ஆண்டுகள் முடிவடைகின்றன. இப்பெருமை வங்கியின் வாடிக்கையாளர்களையே சாரும். வடபிராந்தியத்தில் அபிவிருத்தியை முன்னெடுக்கும் முக்கிய பங்கு எமக்கு உண்டு என்ற வகையில் நாம் இத்திட்டத்தை யாழில் ஆரம்பித்துள்ளோம்.

கடந்த எமது வங்கியின் இலாபமாக 1[illegible] ஆயிரம் கோடி ரூபாய் உள்ளது. எமது வங்கியின் இலாபத்தினை நாம் அரசிற்கே வழங்குகின்றோம். இதனை அரசு எம்முடைய பிரதேச அபிவிருத்திகளுக்கு பயன்படுத்திக் கொள்கின்றது. இலங்கை வங்கியில் நீங்கள் இணைந்தால் அது உங்கள் பிரதேசத்திற்கே வளம் சேர் [illegible] என அவர் மேலும் தெரிவித்தார். (அ-[illegible])

# நாடகப்போட்டியில் மூன்றாமிடம்

(மல்லாகம்)

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு விழா நிறைவினை முன்னிட்டு பாடசாலைகள் மற்றும் மன்றங்கள், கழகங்களிடையே நடத்திய நாடக போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடக அணி மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளது.

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற நாடகப்போட்டியில் மேற்படி பாடசாலையின் திறன் என்னும் நாடகம் மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம் நெறியாள்கையினை இக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள் குமரன் மேற்கொண்டுள்ளார். நடிகர்களாக தி.தலக்ஸன், உஸாந்தன், மகிந்தன், லோன்ஸன், தபேன்ஸன், கார்த்தீபன், சன்ராஜ், நிதர்சன், கு.திலக்ஸன், திஸ்னுகன், தர்ஸன் ஆகியோர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-21)

# டிப்ளோமா கற்கைநெறி விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தினால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம், நுண்நிதியியல் ஆகிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு ஆரம்பமாகும் என முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அறிவித்துள்ளார். (அ-9)

# வயல் நிலங்கள் நீரில் மூழ்கின

(பருத்தித்துறை)

வடமராட்சி பகுதியில் வயல் நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. நெல் விதைக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் நீரில் மூழ்கி காணப்படுவ தால் விவசாயிகள் மனமுடைந்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக பெய்த கன மழையை அடுத்து இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்கள் கால்நடைகளின் அழிவுகளுக்கு உள்ளாகி வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் கால்நடைகளினால் ஏற்படும் அழிவை தடுக்க உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-10)









இலங்கை வங்கியின் சிறிய, நடுத்தர வியாபார முயற்சி (எஸ்.எம்.ஈ) அலகு இல.757, ஆஸ்பத்திரி வீதியில் நேற்று மு.ப. 11.45 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர் கே.தர்மசிறியினால் வங்கி அலகு திறந்து வைக்கப்படுவதையும் வடபிராந்திய பொதுமுகாமையாளர் [illegible] நிகழ்வில் கலந்து கொண்ட வாடிக்கையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞன் அடிப்படை உரிமை மீறல் மனுத்தாக்கல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். குறித்த இளைஞனின் தந்தை சட்டத்தரணி கே. கணேசயோகனின் ஊடாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பொரளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லொக்கு ஹெட்டிஹேவா, புலனாய்வு பிரிவு பணிப்பாளர், பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்கக்கோன், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, மேலதிக பாதுகாப்புச் செயலாளர் எம்.எஸ் ரட்நாயக்க, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வெளிநாடு ஒன்றுக்கு செல்வதற்காக கணனிப் பயிற்சி நெறியொன்றை பூர்த்தி செய்து கொழும்பில் காத்திருந்த குறித்த இளைஞனை தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தினர். எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாது மூன்று ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைத்திருப்பதாக அவர் குறித்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சீனா தனது வாகன சந்தையை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் வாகன வர்த்தகச் சந்தையை முறியடிக்கும் வகையில் சீனா தனது வாகனச் சந்தையை இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி இலங்கையில் வாகன இறக்குமதி, உற்பத்தி மற்றும் விற்பனைச் சந்தையை முற்றாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவுள்ளது.

இதன் முதற்கட்டமாகத் தற்போது இலங்கையில் செயற்படும் சுவீடன் நாட்டுக்குச் சொந்தமான வொல்வோ மோட்டார் நிறுவனத்தின் முழுமையான ஆதிக்கத்தை ஒழிக்கும் வகையில் சீனாவின் ஜீலி என்ற நிறுவனம் கொழும்பில் பாரிய வாகனச் சந்தை ஒன்றை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

அத்துடன் தற்போது இலங்கையில் செயற்படும் மைக்ரோ வாகன நிறுவனத்தையும் சீனா நீண்டகால குத்தகைக்குக் கொள்வனவு செய்யவுள்ளது.

இதன்படி மைக்ரோ நிறுவனத்துக்கு இருபது மில்லியன் டொலர்களை சீன நிறுவனம் வழங்கவுள்ளது. (அ-2)

# சர்வதேச நாணய நிதியத்தின் உறவுகளை கைவிடவுள்ளோம்

## மக்களின் நன்மை கருதி என்றார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் காலங்களில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் மேற்கொள்ளும் உறவுகளை கைவிட உள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பி நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்படி தீர்மானத்தை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.

சிறிகொத்தாவில் நடைபெற்ற லக்வனித்தா சந்திப்பில் நேற்றுமுன்தினம் இணைந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ஐ.தே.க. மாற்றத்திற்கு உள்ளாக்கப்படவுள்ளதாகவும் 2013 ஜனவரி மாதமளவில் மேற்படி மாற்றத்தை கட்சி ஆதரவாளர்களினால் கண்டுகொள்ள முடியும் எனவும் கூறினார்.

நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் சம உரிமை கிடைக்கக் கூடிய வகையில் மேற்படி வேலைத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாகவும் சுதந்திரமான சூழ்நிலை ஒன்றினை நாட்டிலேயே நிலைநாட்டவுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார். (அ-2)




உ

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா

ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹா

ஸ்ரீஸ்ரீ அம்மா பகவான் முக்தி தீக்ஷை

அன்பர்களே!

உலக மக்களாகிய எம்மை வாழ்வினில் ஏற்படும் துன்பங்களிலிருந்து விடுவித்து ஜீவன் முக்தி அளித்து ஜீவன் முக்தராக வாழ ஸ்ரீ அம்மா பகவான் இப்பூவுலகில் அவதரித்து அவதார நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்.

ஜீவன் முக்தி பெற அனைவரும் திடசங்கல்பம் பூண்டு விழிப்புணர்வு பெறும் வண்ணம் ஸ்ரீஸ்ரீ அம்மா பகவானின் முக்தி தீக்ஷை வைபவம் நிகழவுள்ளது.

இடம்:- இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம் சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்.

காலம் :-04.11.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

WEBCAST தரிசனம் 10.00 மணி

ஜாதி மத பேதமின்றி இவ்வைபவத்தில் அனைவரும் கலந்து பயன்பெறும் வண்ணம் அழைக்கின்றோம்.

ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஒன்றியம், யாழ்.மாவட்டம். (873)


# தேசிய வரி வார கருத்தரங்கு நேற்று கிளிநொச்சியில்

(சிவநகர்)

உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தின் தலைமையகமும் அதன் பிராந்திய அலுவலகங்களும் திறைசேரி செயலாளரின் பணிப்புரைக்கமைய நாடளாவிய ரீதியில் தேசிய வரி வாரம் ஒருவாரத்திற்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் தேசிய வரி வாரத்தின்முக்கிய நிகழ்வாக கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு யாழ்ப்பாண மாவட்ட உள்நாட்டு இறைவரித்திணைக்கள பிரதி ஆணையாளர் பி.சிவாஜி தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் வலயம் 2 ஆணையாளர் ஏ.ஏ.டி.யு. அபேசிங்க, அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், ஆணையாளர் கே.டி. ஏ.பி.கோறாலாரச்சி, ஆணையாளர் ஜே.ஏ.ஏ. பராக்கிரம மற்றும் கிளிநொச்சி வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், வர்த்தகர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், கிறிஸ்தவ போதகர்கள், பானியல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வரி செலுத்துதல் தொடர்பான நடவடிக்கைகள் சிநேகபூர்வமாகவே நடைபெற்று வருவதாகவும் இதனால் நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை செய்யக்கூடியதாக இருக்குமெனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. (அ-3-254)


Cambridge Management College

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 03.11.2012

யாழில் முதன்முறையாக UK இல் இருந்து வருகை தந்துள்ள ஆங்கிலேயர்களால் ஆங்கிலம் New Method இல் கற்பிக்கப்படுகின்றது.



Mr. Rob Horne
M.Phil in English
Qualified
Cambridge
Uni Examiner



Ms. Janette Smith
Master of
Education
(English)

பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான தனியான பிரிவு ஆரம்பமாகின்றது. உங்கள் பல்கலைக்கழக கல்வியை சிறந்த ஆங்கில அறிவுடன் தொடர வேண்டுமா? உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

Cambridge Management College
இல. 23, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம், (கச்சேரி பஸ்நிலையம் அருகில்)
தொ.பேசி : 0777740999, 0212221818
Email-cmcjaffna@gmail.com


# டெங்கு நோய் அதிகரிப்பு!

(கொழும்பு)

பருவ பெயர்ச்சி மழை வீழ்ச்சி காரணமாக டெங்கு நோய் தொற்று அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு பணிப்பாளர் பபா பலிஹவடன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக பொதுமக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மழை நீர் தேங்கும் இடங்களை அப்புறப்படுத்துமாறும் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது. (அ-2)


மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அத்தம் 3<br>உயரம்:- 5'6"<br>கி.பா:-14.75 தகைமை:-O/L, அரச அலுவலக சாரதி<br>B/602 | பிறப்பு:- 1972 இந்து (செங்குந்தர்)<br>நட்சத்திரம்:- பூசம் 1<br>உயரம்: 5'9'<br>கி.பா:-47.25<br>தகைமை:-A/L Computer<br>G/608 |
| பிறப்பு:- 1975 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 4<br>உயரம்:-5'10"<br>கி.பா:-31<br>தொழில்:-A/LAccounting (சவுதி)<br>B/226 | பிறப்பு:- 1988 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவோணம் 4<br>உயரம்: 5'4'<br>கி.பா:-83<br>தகைமை:A/L (கணனி)<br>G/354 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சித்திரை 1<br>உயரம்:-5'4"<br>கி.பா:-6.75<br>தகைமை:- HNDA Computer அரச தொழில்<br>B/227 | பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>உயரம்: 5'4"<br>கி.பா: 30.25<br>தகைமை:- Bsc பெரதெனியா பல்கலைக்கழகம்<br>G/355 |
| பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அனுசம் 1<br>உயரம்:-5'7"<br>கி.பா:-22<br>தகைமை:- கனடா ரொரன்ரோ பல்கலைக்கழகத்தில் Soft ware<br>B/228 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ரோகினி 3<br>உயரம்:-5'4"<br>கி.பா: 14.5<br>தகைமை:-பட்டதாரி Bsc ஆசிரியை<br>G/377 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடியோ கோப்புக்களின் பல்வேறு வகைகள்

இசையை ரசிப்பதிலும் அவற்றை பங்கிட்டுக் கொள்வதிலும் மற்றவர்களுக்கு அனுப்புவதிலும் இன்று பலவகையான ஓடியோகோப்புகள் நமக்கு உதவுகின்றன. எடுத்துக்காட்டாக MP3கோப்புகள் பெரிய புரட்சியை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

MP3இது MPEG3என்பதன் சுருக்கமாகும். சுருக்கமான முறையில் சிறிய கோப்புகளாக இசையை பதிவு செய்து அனுப்ப இணக்கமானfile formatஇதுவாகும்.இதனை ஒலிக்கச் செய்திட பல இலவச புரோகிராம்கள் இணையத்தில் கிடைக்கின்றன.வெகுகாலமாக மிக எளிதானதாகவும் பல வசதிகள் கொண்டதாகவும் கருதப்படுவது. WinAmp Player, Windows MediaPlayerஆகும். wav;MP3போல இதுவும் பிரபலமான ஒன்றாகும். டிஜிட்டல் ஓடியோவைப் பதிவதில் இதுவும் ஒரு எளிய சிறிய கோப்பாக உருவாகும் .

aif;Audio interchange File format என்பதன் சுருக்கம் இது.வர்த்தக ரீதியாக வெளியிடப்படும் ஓடியோ சீடிக்களில் இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மிகச் சிறந்த முறையில் ஓடியோவை வெளிப்படுத்தலாம்.துல்லியமான இசையைத் தருவதால் இதன் கோப்பின் அளவு பெரிதாக இருக்கும். மூன்று நிமிடம் பாடக் கூடிய பாடல். 30முதல் 50எம்பி வரை இடம் பிடிக்கும் .ogg;இதனை அடிக்கடி நீங்கள் காண முடியாவிட்டாலும் கட்டாயம் தெரிந்துக்கொள்ள வேண்டியது ஒன்று.இதனை ogg vorbis audio என்று கூறுவார்கள்.

ஆனால் அதற்கு codec என்னும் ஸ்பெஷல் பைல் வேண்டும் .இதனை www.freecodecs என்ற தளத்தில் இருந்து இறக்கிக் கொள்ளலாம்.

.wma Windows Media audio Files என்பதன் சுருக்கம் இந்த வகையை மைக்ரோசொப்ட் நிறுவனம் உருவாக்கியது .இந்த வகை கோப்புகளும் அளவில் மிகச் சிறியதாக இருக்கும்.Windows Media Player இதனை இயக்கி ரசிக்கலாம்.




# Facebook Messenger ஐ Firefox உலாவியில் Enable செய்ய

சமூகவலைத்தளங்களின் அதிகரித்த பாவனையைக் கருத்தில் கொண்டு அவற்றினை இலகுவாக பயன்படுத்தக்கூடியவாறு நீட்சிகளை ஒவ்வொரு உலாவிகளும் அறிமுகப் படுத்திக் கொண்டே இருக்கின்றது.

இவற்றின் அடிப்படையில் தற்போது Mozilla நிறுவனமானது, தனது Firefox உலாவிகளில் Facebook Messenger இனை பயன்படுத்துவதற்கான API ஒன்றினை வெளியிட்டுள்ளது.


இதனால் பேஸ்புக் தளத்திற்குள் செல்லாது உலாவியிலிருந்தவாறே நண்பர்களுடன் சட்டிங் இல் ஈடுபட முடிவதுடன் செய்திகளை அனுப்பவும் முடியும். தவிர Notification Friend Request ஆகியவற்றினையும் அவதானிக்க முடியும்.

இவ் வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கு Facebook Messenger (http://www.mozilla.org/en-us/firefox/beta/?WT.mc_id=fbmbeta)- இனைத் தரவிறக்கம் செய்து நிறுவிக் கொள்ளவும்.

பின்னர் http://www.Facebook.com/about/messenger-or-firefox இந்த இணைப்பில் கிளிக் செய்து தோன்றும் பக்கத்தில் காணப்படும் Turn On பொத்தானை அழுத்தவும். இப்போது Facebook Messenger வசதியானது Enable செய்யப்பட்டுள்ளது.

இதனை Disable செய்வதற்கு Firefox உலாவியின் Options பகுதிக்கு சென்று அங்கு தென்படும் Facebook Messenger for Firefox என்பதை அகற்றவும்.

# கூகுள் அறிமுகப்படுத்தும் Nexus 4 கைப்பேசிகள்




பல்வேறு தொழில்நுட்ப சேவைகளை மக்களுக்கு வழங்கிவரும் கூகுள் நிறுவனமானது தனது புதிய தயாரிப்பில் உருவான Google Nexus 4 ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

Android OS மற்றும் Android 4.2 jelly Bran ஆகிய இயங்குதளங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பதிப்புக்களாக வெளிவரும் இக்கைப் பேசிகள் 4.7 அங்குலமுடைய தொடு திரை வசதியினைக் கொண்டுள்ளதாகக் காணப்படுவதுடன் இதன் Resolution ஆனது 1280x768 Pixels களாக அமைந்துள்ளது. மேலும் 1.5 GHz வேகத்தில் செயற்படக்கூடியதும் Qualcomm Snap dragon S4 தொழில்நுட்பத்தில் உருவானதுமான Processor இனைக் கொண்டுள்ளதுடன் பிரதான நினைவகமாக 2 GB RAM இனையும் கொண்டுள்ளது.

இவற்றுடன் சேமிப்பு கொள்ளளவு 8 GB மற்றும் 16 GB இனைக் கொண்டு இரண்டு வகைகளாக கிடைக்கின்றது.

இவை தவிர 8 Mexapixels உடைய பிரதான கமெரா பொருத்தப்பட்டுள்ளதுடன் வீடியோ அழைப்புக்களுக்காக 1.3 Mexapixels உடையதுணை கமெரா ஒன்றினையும் கொண்டுள்ளது.

# புதிய பயனர் இடைமுகத்தினை யூடியூப்பில் பெறுவதற்கு

உலகின் முன்னணி வீடியோ தளமாகத் திகழும் யூடியூப்பானது பயனர்களுக்கான புதிய இடைமுகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இப்புதிய இடைமுகத்தின் ஊடாக You Tube Subscription, Recommendation, Play list, User Stream, History, Watch, Videos போன்றவற்றினை இலகுவாக கையாளக்கூடியவாறு காணப்படுவதுடன் மேலதிகமான Google Plus விருப்பங்களை பெற்றுக் கொள்வதற்கான வசதியையும் தருகின்றது. இவ்வசதியினை உங்கள் உலாவியில் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் படிமுறைகளைக் கையாளவும்.

1. முதலில் யூடியூப் தளத்திற்கு செல்லவும்.

2. அதன் பின்னர் Browser Developer Console வசதியினை ஏற்படுத்திக் கொள்ளவும். இதனைப் பெறுவதற்கு ஒவ்வொரு உலாவிகளினதும் இயங்கு தளங்களினதும் அடிப்படையில் Shortcut- Key களை பயன்படுத்த முடியும்.

அவையாவன,

❖ Windows/ Linux / Chrome OS இயங்குதளங்களில் Chrome உலாவி பயன்படுத்தின் Ctrl+ Shift+J என்பதனை அழுத்தவும் அல்லது Mac இயங்குதளத்தில் Chrome உலாவி பயன்படுத்தின் Command+ Option+ J என்பதனை அழுத்தவும்.

❖ Windows/Linux இயங்குதளங்களில் Opera உலாவி பயன்படுத்தின் Ctrl+ Shift+ Command+ Option+K இயங்குதளத்தில் Firefox உலாவி எனின் Command+ Option+ K என்பவற்றினையும் அழுத்துக.

❖ Windows/LinukX இயங்குதளங்களில் Firefox உலாவி பயன்படுத்தின் Ctrl+ Shift+ L என்பவற்றினையும் Mac இயங்குதளத்தில் Firefox உலாவி எனின் Command+Open+L அழுத்தி Console tap இனை தெரிவு செய்யவும்.

3.தொடர்ந்து தோன்றும் Browser Developer Console பகுதியினுள் பின்வரும் Code இனை பிரதி செய்து Enter செய்து Console இனை மூடவும். Document. cookie= VISITOR - INFO1- LIVE= jZNC3DCddAk; path=/; domain= you.com window. location. reload();

4. மீண்டும் பழைய பயனர் இடை முகத்திற்கு செல்ல வேண்டும் எனின் மேலும் படிமுறைகளைத் தொடர்ந்து Console பகுதியில் document.cookie= VISITOR-INFO1-LIVE= path=/ domain= youtube.com window location reload (); இனை பிரதி செய்யவும்.

# Samsung அறிமுகப்படுத்தும் Galaxy Premier கைப்பேசிகள்




முன்னணி கைபேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான samsung ஆனது தனது உருவாக்கத்தில் வெளியாகி பிரபலமடைந்து Galaxy Siii கைபேசியின் உருவாக்கத்தை ஒத்த வடிவமைப்பினைக் கொண்ட Galaxy premier கைப்பேசிகளை அறிமுகப்படுத்தவுள்ளது.

இக்கைப்பேசிகள் 4.65 அங்குல அளவுடையதும் 1280X 720 pixels resolution உடைய super AMOLED தொடுதி ரையினைக் கொண்டுள்ளதுடன் TI OMAP 4470 வகையைச் சார்ந்த 1.5GHz வேகத்தில் செயற்படக் கூடிய Processor இனையும் கொண்டுள்ளது.

மேலும் இவை Android4.1 Gelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் பிரதான நினை வகமாக 1GB RAM காணப்படுகிறது.

இவற்றுடன் 8 MEXAPIXELS உடைய பிரதான கமெராவும்,வீடியோ அழைப்புகளை மேற்கொள்வதற்காக 1.9 MEXAPIXELS உ டைய துணைக்கமெரா ஒன்றும் பொருத்துப்பட்டுள்ளது.இவற்றில் பெறுதிமதியானது. 680 அமெரிக்க டொலராகும்.

# போலியான பேஸ்புக் கணக்குகளை முறையிடுவதற்கான வழிமுறை

சமூக வலைத்தளங்களின் மத்தியில் முன்னணியில் திகழும் பேஸ்புக் தளத்தினால் நன்மைகள் காணப்பட்ட போதிலும் அவற்றினை மீறிய அளவிற்கு தீங்குகளும் காணப்படுகின்றன.

இவற்றில் போலியான கணக்குகளை ஆரம்பித்துக் கொண்டு மற்றவர்களை தொந்தரவு செய்பவர்களும் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களினதும் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனவே இவ்வாறானவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும் பேஸ்புக் தளத்தின் பயனை சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதற்காகவும் போலியான கணக்கினைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் பேஸ்புக் தளத்திற்கு தெரிவிக்கும் போது குறித்த கணக்குகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனைச் செயற்படுத்துவதற்கு உங்கள் கணக்கினைப் பயன்படுத்தி பேஸ்புக் தளத்தினுள் உள்நுழைந்து போலியான கணக்கு என நீங்கள் கருதுபவரின் Timeline இற்கு செல்லவும். தொடர்ந்து Message Tab இற்கு அண்மையில் காணப்படும் Settings பொத்தானை அழுத்தி Report Block என்பதை தெரிவு செய்யவும்.

அப்போது தோன்றும் Pop-up விண்டோவில் This timeline pretengline someone or is Fake என்பதை தெரிவு செய்து தொடர்ந்து அதன் கீழ்ப்பகுதியில் உள்ள rop down மெனுவில் போலியான கணக்கின் வகையை தேர்ந்தெடுத்து Continue பொத்தானை அழுத்தவும்.

அதன் பின்னர் I confirm that this report is correct என்பதை தெரிவு செய்து Okay பொத்தானை அழுத்தி சமர்ப்பிக்கவும்.

உங்களிடம் பேஸ்புக் கணக்கு ஒன்று இல்லை எனின்.இந்த இணைப்பில் கிளிக் செய்து (http://www.facebook.com/ help/contact/?id=169486816475808) தோன்றும் படிவத்தினை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் போலியான கணக்கு ஒன்றின் மீது நடவடிக்கை எடுக்க வைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் தலைவர்கள் சரணாகதி அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர்

## முஸ்லிம்களின் துன்பத்துக்கு இதுவே காரணம்-பைசால்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் முஸ்லிம்களின் புனித நாளான ஹஜ் பெருநாளன்று பள்ளிவாசல் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவமானது முஸ்லிம் சமுதாயம் முழுவதற்கும் அதிர்ச்சியையும் மிகப்பெரிய சோகத்தையும் உருவாக்கியுள்ளது என முஸ்லிம் இடதுசாரி முன்னணி பொதுச் செயலாளர் மொஹமட் பைசால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை. அரசாங்கத்தில் ஒட்டியிருக்கும் முஸ்லிம் தலைவர்கள் வெட்கமில்லாமல் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என வழமைபோல் கூறத் தொடங்கியுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தமது கண்டனங்களையோ அரசாங்கத்திற்கு அழுத்தங்களையோ இவர்கள் வழங்காமல் இருந்து வருகின்றனர். ஒன்றல்ல இரண்டல்ல இருபதுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலைமை மேலும் தொடர்வதற்கு உரிய சூழ்நிலைகளே உருவாகியுள்ளன.

முஸ்லிம் தலைவர்களின் சரணாகதி அரசியல் செயற்பாட்டால் நாம் இந்த துயரத்தை அனுபவிக்கிறோம். வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் இந்தப் பேரினவாத அரசாங்கத்திற்கு எமது தலைவர்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர். மறுபக்கத்தில் வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் துயரத்தை நாம் அனுபவித்து வருகின்றோம்.

அரசாங்கம் தமக்கு ஆதரவை வெளிப்படுத்துமாறு கேட்கும் போதெல்லாம் பல்வேறு வழிகளில் மக்களை வீதிக்கு கொண்டு வந்து அரசாங்கத்திற்கு சார்பாக குரல்கொடுக்க வைக்கின்றனர். ஆனால், எம் மக்கள் மீது கொடுமைகள் இழைக்கும்போதும் மௌனமாகவே இருக்கின்றனர்.

இன்றைய காலப்பகுதியில் முஸ்லிம் சமுதாயம் ஆட்சியாளர்களுக்கு எதிராகவே உள்ளது. இதை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிபு நன்கு புலப்படுத்தியுள்ளது.

ஆனால், முஸ்லிம் மக்களின் முடிவிற்கு எதிராகவே முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்ததன் மூலம் கிழக்கு மாகாண சபை அரசாங்கத்திற்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. அது போதாது என்று திவிநெகும சட்டத்திற்கும் ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் இத் துரோகச் செயல் குற்றுயிராக இருந்த பேரினவாதத்தளம் மீண்டும் பலம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

இன்றைய காலகட்டத்தில் இந்த பேரினவாத அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ந்து எழும் தென்னிலங்கை சக்திகளுடன் கைகோர்த்து செயற்பட நாம் தயாராக வேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# மக்களின் தேவைகளை அறிந்து எரிபொருள் இறக்குமதி

## ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

மக்களின் தேவைகளை அறிந்து உடனடியாக எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போது ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உரிய முறையில் பராமரிக்க வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நுகர்வோருக்கு எரிபொருள் விநியோகம் மற்றும் மின்சார விநியோகத்தின் போது நட்டத்தை எவ்வாறு குறைப்பது என்பது பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ-2)

# 10 இலட்சம் ரூபாவை மோசடியாக அபகரித்த நால்வர் கைதாகினர்

இணையத்தளமொன்றில் விளம்பரங்களைப் பார்வையிடுவதற்கு உறுப்பினராக சேர்த்துக் கொள்வதாகக் கூறி இலட்சக்கணக்கான பணத்தை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புறநகர் பகுதியான கொட்டாவை மற்றும் பன்னிப்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச ரீதியில் சுமார் 125 நாடுகளில் தமது விளம்பர இணையத்தளத்திற்கு அங்கத்தவர்கள் இருப்பதாகக் கூறிய இவர்கள் 10 இலட்சத்துக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளனர்.

விளம்பரங்களைக் காட்சிப்படுத்தும் மேற்படி இணையத்தளத்தில் விளம்பரங்களைப் பார்வையிடுவதற்காக குறிப்பிட்டதொகை பணம் தரகாக வழங்கப்படும் என்றும் அதற்கான உறுப்புரிமையைப் பெறுவதற்கு 500 அமெரிக்க டொலர்கள் (66 ஆயிரம் ரூபா) செலுத்தப்பட வேண்டும் என்று கூறியே மேற்படி நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். தங்களுக்கு உறுதி செய்யப்பட்ட தரகுப் பணம் மாத்திரமின்றி தாங்கள் செலுத்திய உறுப்புரிமை பணம் கூட தங்களுக்கு கிடைக்கவில்லை என யுவதிகள் 15 பேர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் குறித்த சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்து தீவிர விசாரணைக்களுக்கு உட்படுத்தி வருகின்றனர். (அ-2)

# வர்த்தக அமைச்சருக்கு பிரதி அமைச்சர் உதவி

(கொழும்பு)

சர்வதேச வர்த்தக அமைச்சர் சரத் அமுனுகமவிற்கு பிரதிநிதி அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பிரதிநிதி அமைச்சர் பதவியை வகித்து வரும் கீதாஞ்சன குணவர்த்தனவிற்கு பெருந்தோட்ட விவகார பிரதி அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது.

குறித்த இருவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுக் காலை அலரிமாளிகையில் பதவிப் பிரமாணம் செய்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார மற்றும் நிதி விவகாரங்களில் சரத் அமுனுகம பாண்டித்திய அனுபவமும் நிறைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக பிரதிநிதி அமைச்சர் பொறுப்பு அமுனுகமவிற்கு வழங்கப்பட்டிருக்கலாம் என அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் நிதி அமைச்சர் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




★ 1570-வட கடலில் ஏற்பட்ட சூறாவளி காரணமாக ஒல்லாந்தில் ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1834-முதன் முதலாக இந்தியாவில் இருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.

★ 1868-நியூசிலாந்து சீர் நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.

★ 1889-வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39ஆவது, 40ஆவது மாநிலங்க ளாக முறையே இணைந்தன.

★ 1899-தென்னாபிரிக்காவில் போவர்கள், பிரித்தானியர்கள் வசம் இருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.

★ 1914-ரஷ்யா ஒட்டோமான் பேரரசு மீது போரை அறிவித்தது.

★ 1917-பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.

★ 1930-ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.

★ 1936-இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி ரோம்-பேர்லின் அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.

★ 1936-பிபிசி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.

★ 1936- கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.

★ 1953-பாகிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1963- தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோடின் டியெம் இராணுவப் புரட்சியை அடுத்து உயிரிழந்தார்.

★ 1974-தென் கொரியத் தலைநகர் சியோலில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 78 பேர் உயிரிந்தனர்.

★ 2000-பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு முதன் முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.

★ 2006-பெங்களூர் நகரின் பெயர் பெங்களூரு என மாற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1795-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11ஆவது ஜனாதிபதி (இ.1849)

★ 1815- ஜார்ஜ் பூல், ஆங்கிலேயக் கணிதவியலாளர் (இ.1864)

★ **1965- ஷாருகான், இந்தி நடிகர்.**

### இறப்புக்கள்

★ 1917-ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர். (பி.1858)

★ 1950-ஜோர்ஜ் பேர்னாட் ஷா, ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி. 1856)

★ 1966-பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்றவர். (பி.1884)

★ 1978- ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர்.

### சிறப்பு நாள்

★ கல்லறைத் திருநாள்

**ஷாருக்கான்**




ஷாருக்கான் பிரபல இந்தித் திரைப்பட நடிகர். திரைப்படத் தயாரிப்பாளராகவும் தொலைக் காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் விளங்குகிறார். 1980 களின் பிற்பகுதியில் தொலைக் காட்சித் தொடர்களில் நடிக்கத் தொடங்கி 1992 இல் தீவானா என்ற இந்தித் திரைப்படத்தில் அறிமுகமானார். இவருக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். ஐபிஎல் அணிகளில் ஒன்றான கொல்கத்தா அணியை தனது நண்பர்களான ஜூஹி சாவ்லா மற்றும் ஜெய் மேத்தா ஆகியோருடன் சேர்ந்து வாங்கியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய புதிய வெளிவிவகார அமைச்சருடன் பீரிஸ் சந்திப்பு

## இனப்பிரச்சினை தொடர்பில் ஆராய்வு

புதிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஜித்திற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்ற்கும் இடையில் சந்திப்பொன்று இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதன்போது இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இலங்கையின் மீள் குடியேற்றம் தொடர்பில் புதிய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும் இதன்போது ஆராயப்படும் என்று டே என் நைட் என்ற இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்து சமுத்திர ஒத்துழைப்பு நாடுகளின் மாநாடு தற்போது இந்தியாவில் இடம்பெற்று வரும் நிலையில் அதில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பங்கு கொண்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முள்ளிவாய்க்காலில் மீட்கப்பட்ட ஆட்லறிகள் சீனாவின் தயாரிப்பு

## விசாரணைகளை ஆரம்பித்தது இராணுவம்

(கொழும்பு)

முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகள் சீனத் தயாரிப்புக்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்லறிகள் விடுதலை புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து இலங்கை இராணுவத்தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

நீலம் புயலினால் ஏற்பட்ட மண் அரிப்பை அடுத்து விடுதலைப் புலிகளால் கரையோரத்தில் புதைத்து வைக்கப்பட்ட 5 ஆட்லறிகளை இலங்கை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

இவை அனைத்தும் சீனாவில் தயாரிக்கப்பட்டவை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போரின் போது விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் இந்த ஆட்லறிகள் மூன்றரை ஆண்டுகளாக கண்டுபிடிக்கப்படாதது குறித்து இலங்கை இராணுவத் தரப்பு அதிர்ச்சியடைந்துள்ளது.

நீலம் புயலினால் காட்டிக் கொடுக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ள இந்த ஆட்லறிகள் விடுதலைப் புலிகளின் கைக்கு எவ்வாறு கிடைத்தன என்ற விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்துள்ளது.

இவை விடுதலைப் புலிகளால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இலங்கை இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையா என்று கண்டறிய விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை முதல்முறையாக ஒரே தடவையில் விடுதலைப் புலிகளின் 5 ஆட்லறிகளை கைப்பற்றியுள்ள இராணுவத்தினர் அந்த பகுதியில் தேடுதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார். (அ-2)

# புலிகள் மீதான தடைகுறித்து வாதாட தயாராகிறார் வைகோ

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கோரி முன்வைக்கப்பட்ட மனுக்கள் தொடர்பில் நாளை சனிக்கிழமை இறுதி விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த விசாரணையின் போது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக செயலாளரும் சட்டத்தரணியுமான வைகோ புலிகளுக்கு எதிரான தடையை நீக்குமாறு கோரி வாதாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக நடைபெற்ற 3 நாட்கள் தொடர் விசாரணை கடந்த திங்கட்கிழமை முடிவடைந்தது. இந்த விசாரணைகளில் தமிழக பொலிசார் உட்பட பலர் சாட்சியமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் புலி உறுப்பினர்களிடமிருந்து வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக தமிழக பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (அ-2)

# ஆஸி.செல்வோரை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

தென்மாகாணத்திலிருந்து சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்பவர்களை தடுப்பதற்கு மாத்தறையில் பொலிஸ் பிரிவொன்றை அமைக்க தென்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக தங்காலை குடாவெல்ல, தெவிநுவர, கந்தரை, மிரிஸ்ஸ ஆகிய இடங்களிலிருந்து கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

மாத்தறை காளிதாஸ வீதியிலுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலிருந்து செயற்படும் மாத்தறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.எம். ஜயரத்ன இந்தப் பிரிவுக்கு பொறுப்பாக நிய மிக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னக்கோனின் கண்காணிப்பின் கீழ் இந்த விசேட பொலிஸ் பிரிவு இயங்கும். (அ-2)

# மாகாணசபை முறைமைக்கு ஆதரவளிப்போர் பதவிவிலக வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

மாகாணசபை முறைமைக்கு ஆதரவளிக்கும் தரப்பினர் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

மாகாணசபை முறைமை சரியானது என பிரசாரம் செய்யும் தரப்பினர் ஆளும் கட்சியிலிருந்து விலகிக்கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ.குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் அரசாங்கத்தை விட்டு விலக வேண்டுமென கட்சியின் பிரசாரச் செயலாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய, ஜே.என்.பி. மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்க ஜே.வி.பி.யினர் விரும்பவில்லை எனவும் அரசாங்கத்தை கவிழ்ப்பதே ஜே.வி.பி.யின் நோக்கமாக அமைந்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## வரவு செலவு திட்டத்தில்

# நிவாரணங்கள் இல்லாவிட்டால் மூன்று மாதங்களுக்கு போராட்டம்

## ஐ.தே.கட்சி அறிவிப்பு

வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்த்தளவு நிவாரணங்கள் வழங்கப்படாவிட்டால் போராட்டம் நடத்த நேரிடும் என எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டளவு நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படா விட்டால் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படும் என எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு அறிவித்துள் ளது.

எதிர்க்கட்சிகளினது தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 9 எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டாக இணைந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர். (அ-2)



யாழ்.சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# காலநிலை சீற்றத்தால் வன்னி மக்களின் அவலம் தொடர்கின்றது

வன்னியில் பெய்துவரும் அடைமழை காரணமாக இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களின் தற்காலிக வீடுகளில் வெள்ள நீர் புகுந்தனாலும் மழை ஒழுக்கினாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனந்தபுரம், கோம்பாவில், மந்துவில், மல்லிகைத்தீவு உட்பட பல இடங்களில் பெருமளவில் ஒரே தடவையில் பல குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி அவர்களின் வாழ்விடங்களில் குடியேறியதன் காரணமாகவே அவர்கள் தங்கியிருந்த தறப்பாள் கொட்டகைகளும் தற்காலிக தகர கொட்டகைளும் காற்றுக்கும் மழைக்கும் தாக்குப்பிடிக்க முடியாது பாதிப்படைந்துள்ளது. இதேபோன்று துணுக்காய், மாந்தை கிழக்கு, பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பல கிராமங்களில் தற்காலிக வீடுகளில் வசித்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். கால போக நெற்செய்கைக்காக சேமித்து வைத்திருந்த விதைநெல் உட்பட அவர்களது உடைமைகள் மழை நீரினால் நனைந்துள்ளன.

காலபோக நெற்செய்கையில் பல விவசாயிகளின் வயல்கள் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளன.


கடந்த வருடமும் வங்கிகளில் வட்டிக்கு பணம் எடுத்து பயிர் செய்து வறட்சியால் அழிவடைந்த நிலையில் இம்முறையும் கடன் பட்டு காலபோக நெற்செய்கை மேற்கொண்டவர்கள் இம்முறையும் அழிவுகளை எதிர் நோக்கியுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

௪௧

மக்கள் தமது விவசாயத்திற்கும் வீட்டுப்பாவனைக்கும் தேவையான கருவிகளை சிறுதொழில்களாகச் செய்துகொண்டனர். தச்சுத்தொழில், இரும்புத் தொழில்



கண்டி தலதாமாளிகை

(கத்தி, கோடரி, கலப்பை,ஏர்), உலோகக் கைத்தொழில் (வெண் கலச் சிலைகள், ஆபரணத் தொழில், களிமண் குயவத் தொழில் (சட்டி, பானை), பன்னவேலை (பாய், கடகம் பெட்டி), க்லைப் பொருட்கள் உற்பத்தி முதலான சிறுகைத் தொழில்கள் இருந்துள்ளன. பெரும்பாலும் குலமுறை அடிப்படையிலே இப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் வர்த்தகத்தில் முக்கியம் பெற்றிருந்தன. உள்நாட்டு வியாபாரமானது நடமாடும் வியாபாரிகள் மூலம் பண்டமாற்றாக நடைபெற்று வந்தது.

கலாநிதி. க.குணராசா
(செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா

நடமாடும் வியாபாரிகளாக முஸ்லிம் வியாபாரிகள் இருந்தனர். கறுவா, மிளகு, ஏலம், கராம்பு போன்ற வாசனைத்திரவியங்களும் வெற்றிலை, பாக்கு, முத்து, மாணிக்கம், யானை என்பனவும் ஏற்றுமதி வர்த்தக த்தில் இடம்பெற்றிருந்தன. புடை வைகள், பட்டுக்கள், குதிரைகள், வெடி, உப்பு என்பனவும் இறக்குமதி செய்யப்பட்டன.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பக்கட்டத்தில் இலங்கையின் சமூகநிலை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாக விளங்கியது. இராஜகாரியமுறை அரச சேவையாக இருந்தது. அரசன் மானியமாக வழங்கிய நிலத்திற்காகக் குடிமக்கள் இராஜகாரிய சேவை செய்யும் கட்டாயத்திற்குட்பட்டிருந்தனர். விவசாயத்தில் சேனைப் பயிர்ச்செய்கை முறை இருந்தது. மரங்களில் சேனைப் பயிர்ச்செய்கைக் காப்பரண் அமைந்திருந்தனர். பெரும்பாலும் இலங்கைக் கிராமங்கள் தன்னிறைவு கொண்டனவாக இருந்தன. தமது சுய தேவையை கிராமமக்களே பூர்த்தி செய்து கொண்டனர். தாம் உற்பத்தி செய்யாத பொருட்களுக் காகத் தாம் உற்பத்தி செய்த பொருட்களை வழங்கி, அவர்களிட மிருந்து தமக்குத் தேவையான பொருட்களுக்காகப் பண்டமாற்றம் செய்து கொண்டனர். அவர்களது வதிவிடங்கள் சிறிய வீடுகளாகவும் குடிசைகளாகவும் இருந்தன. மண் அப்பிய வரிச்சுவர்களும் உயர்ந்த தூண்களும் கொண்டிருந்தன. கூரைகள்,

# கோட்டை இராஜதானியும் கண்டி இராஜதானியும்

கீற்று ஓலைகளினாலும் வைக்கோலினாலும் இலைகளாலும் வேயப்பட்டிருந்தன. வரண்ட வலயக் கிராமிய வீடுகளின் முற்றத்தில் கோர்க்காலி எனப்படும் நெற்கொட்டு (தானியம் சேகரித்து வைக்கும் பட்டறை) அமைந்திருக்கும். அதனைச் சிங்கள மக்கள் **வீ பிஸ்ஸ** என்பர்.

மதகுருமாருக்கும் மூத்தோருக்கும் கிராமிய மக்கள் மிக்க மரியாதை செய்தனர். அத்துடன் பிரதான சடங்குகளில் அவர்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது. கிராமங்கள் கிராமத் தலைவர் ஒவ்வொருவரால் நிர்வகிக்கப்பட்டன. கிராம மக்களிடையே ஏற்படும் பிணக்குகளைத் தீர்க்க கிராமத்தலைவரையும் கிராமத்தின் மூத்தோரையும் கொண்ட கிராம சபை ஒன்று இருந்தது. சிங்களக் கிராமங்களின் சமய நடவடிக்கைகள் கிராமத்தின் பன்சலைகளால் (விகாரை) நிறைவு செய்யப்பட்டன. தமிழ்க்கிராமங்களில் ஆலயங்கள் அப்பணிகளை ஆற்றின. பன்சலைகளே கிராமியப் பாடசாலைகளாகவும் விளங்கின. தமிழ் பிரதேசங்களில் திண்ணைப் பாடசாலைகள் இருந்தன. சகுனம் பார்த்தல், சோதிடம் பார்த்தல், வைத்தியம் பார்த்தல் என்பனவும் சமய நிறுவனங்களால் ஆற்றப்பட்டன.

இக்காலத்தில் குடும்ப வாழ்க்கை முறை பல்வேறு சடங்குகளைக் கொண்டிருந்தது. பிறப்பிலிருந்து இறுதி வரை சடங்கு முறைகள் இருந்தன. மாப்பிள்ளை வீட்டில் பெண் வாழ்தல் முறை (தீக விவாகம்) சிங்கள மக்களிடையே இருந்தது. பெண் வீட்டில் மாப்பிள்ளை வாழ்தல் முறை (பின்ன விவாகம்) தமிழ் மக்களிடையே கூடுதலாக இருந்தது. விதி விலக்குகளும் இருந்தன.

(ஏ) அக்கால சமூகத்தில் பெண் மதிக்கப்பட்டாள். பல சலுகைகள் வழங்கப்பட்டன. சொத்துக்களுக்கான **மாரால** என்னும் வரி பெண்களிடம் அறவிடப்படவில்லை. பொருட் போக்குவரத்தில் ஊடுவரி (ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குரிய கடவை வரி) அறவிடப்படவில்லை. பெண்களுக்குச் சரீரத் தண்டனைகள் அதிகாரிகளால் வழங்கப்படவில்லை. தாய் என்ற வகையில் பெண் சமுகத்தில் கெளரவமாக மதிக்கப்பட்டாள்.

இலங்கையின் முக்கியமான சமயங்களாக பெளத்தமும் சைவமும் விளங்கின. இலங்கையின் கரையோரங்களில் தங்கியிருந்த முஸ்லிம் வர்த்தகர்கள் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றினர். அதனால் இலங்கையில் சமய ஒற்றுமை இருந்தது. மதப்பிணக்குகள் இருக்க வில்லை. கோட்டை இராச்சியத்தில் இக்காலத்தில் சமய மறுமலர்ச்சி தோன்றியது. சமயத்தினை வளர்க்கும் பெளத்த பிரிவேனாக்கள் பல அமைந்திருந்தன. பெபிலியானே சுனேத்திரா மகாதேவி பிரிவேனா, காரகல பத்மாவதி பிரிவேனா, பெந் தோட்ட கலபாத பிரிவேனா, சுனேத்திரா விகாரை, தெவுந்திர இருகல் குலதிலக பிரிவேனா, தொட்டக முவே விஜயா பிரிவேனா போன்ற சமய மத்திய தலங்கள் தொழிற்பட்டன. அக்காலத்தில் தம்மதின்ன விமல கீர்த்தி பிக்கு, தொட்டகமே ஶ்ரீ ராகுல பிக்கு, பெபிலியானே மங்கள பிக்கு, காரகல வனரத்ன பிக்கு, விதாகம மைத்திரேய பிக்கு முதலான தலைமைப் பிக்கு அறிஞர்களும் அவர்தம் சீடர்களும் நாடெங்கும் பெளத்த சமயத்தைப் போதித்தனர். பெளத்த நூல்கள், சமயச்சடங்குகள், விழாக்கள், வைபவங்கள் என்பன நாடெங்கும் நடாத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தைப் பிரதானமாகக் கொண்டு நாடெங்கும் இந்து சமயம் பரவியிருந்தது. தமிழ் மன்னர்களின் ஆதரவுடன் இந்துக் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. சிவதேவாலயங்கள், கந்தன் ஆலயங்கள், விஷ்ணு தேவாலயங்கள், விநாயகர் கோயில்கள் மற்றும் கிராமியத் தெய்வங்களுக்கான கோயில்கள் என்பனவும் இருந்தன. சமய வேறுபாடுகள் இன்றி மன்னர்கள் அனைத்துச் சமயங்களுக்கும் ஆதரவு வழங்கி வந்தனர்.

புகழ் பெற்ற கல்வியாளர்கள் அக்கால கட்டத்திலிருந்தனர். தொட்டகமுவே ஶ்ரீ ராகுல, வன ரத்ன தேரோ, விதாகம தேரோ என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். பல்வேறு பிரிவேனாக்களும் புகழ்பெற்ற கல்வி நிலையங்களாக விளங்கின.



களனி விகாரை

லேவடசங்கராவ, சாந்தி சதக்கய, தலதா சிரிதத, கௌசிலுமி, புதகுண லங்கார, குத்திலகாவிய, காவிய சேகர, பராக்குமட பாசிரித, சந்தர்மரத்னாவலிய, கோகில, பரவி, சந்தேச, கிரா, பரவி, சலலீனி ஆகிய நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. கோட்டையில் தலதா மாளிகை கட்டப்பட்டமையும் களனி விகாரை கட்டுவிக்கப்பட்டமையும் முக்கிய சமயப் பணிகளாகும். வைத்திய சிந்தாமணி, யோகரத்னாகரய என்ற இரண்டு வைத்திய நூல்கள் எழுதப்பட்டன.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## யாழ்.குடாநாட்டு கடற்பரப்பில் காணப்படும் சூடை மீன் இனங்கள், உற்பத்தி மற்றும் அவற்றின் முக்கியத்துவம்

(தொடர்ச்சி)

**சூடை மீன்களுக்குரிய பொதுவான அடையாளப்படுத்தும் இயல்புகள்:**

❖ இரு முனை கூம்பிய, பகுதி உருளையான, அதிகளவில் அழுத்தப்பட்ட உடல்.

❖ பரிசைகளை (scutes) கொண்ட வயிற்றுப்பகுதி

❖ சிறிய, ஆழமான, கீழ்த்தாடை.

❖ முட்கதிர்கள் (spines) அற்ற செட்டைகள் (fins).

❖ உடலின் நடுப்பகுதிக்கு அண்மையில் அமைந்த தனியான சிறிய முதுகுப்புற செட்டை (dorsal fin)

❖ அதிகளவில் கவர்கொண்ட வாற்செட்டை (caudal fin)

❖ உடலின் பிற்புறம் நீலம் கலந்த பச்சை நிறம், பக்கப்புறம் silvery

❖ கறுப்பு நிறமான புள்ளி/ கடும் நிறமான அடையாளங்களைக் கொண்ட பூப்பிளவு

**சூடை மீன் இனங்களுக்குரிய தனித்துவமான அடையாளப்படுத்தப்படும் இயல்புகள்**

*1.Sardinella gibbosa (Bleeker, 1849)*

**FAO name: En- Goldstripe sardinella**

**இம் மீனின் அடையாளப்படுத்தப்படும் தனித்துவமான இயல்புகளாவன,**

➢ இருமுனை கூம்பிய, ஓரளவு தட்டையான உடல்.

➢ 32-34 வரையான பரிசைகள் (scutes)

➢ 1 ஆவது பூவில்லின் (1 st gill arch) கீழ் அவயத்தில் (lower Limp) 45-59 பூவாரிகள் (Gill rakers)

➢ தொடர்ச்சியற்ற நிலைக்குத்தான வரிகளை (discontinuous striae) கொண்ட செதில்கள் (scutes)

➢ பிற்பகுதியில் அதிகளவிலான நுண் துளைகளை கொண்ட செதில்கள்.


**நிறம்**

★ பொன் நிறமான தனியான வரியினை கொண்டமைந்த உடலின் மேற்பகுதி.

★ முதுகுப்புற செட்டையின் ஆரம்பத்தில் சிறிய கறுப்பு நிறத்திலான புள்ளி.

★ சாம்பல் நிற விளிம்புகளை கொண்ட வாற்செட்டை.

*2.Sardinella longiceps (Valenciennes*, 1847)




**FAO name: En- Indian oil sardine**

✦ இரு முனையும் கூம்பிய, நீண்ட, பகுதி உருளையான உடல்.

✦ நீண்ட, அதிகளவான பூவாரிகள் (150-253)

✦ 1 கிளைவிட்ட 8 கிளைவிடாத கதிர்களை கொண்ட இடுப்புச் செட்டை (Pelvic fin)


**நிறம்**

☆ பிற்புறத்தில் கறுப்பு நிறமான புள்ளியை கொண்ட பூமூடி

☆, உடம்பின் பிற்புறத்தில் பொன்நிறமான துண்டுகள் (Golden patches)

☆ முகுப்புற செட்டை நுனிப்பகுதி, வாற்செட்டை சோனைப் பகுதி சாம்பல் நிறம்.

**சூடை மீன்களின் முக்கியத்துவம்**




சூடை இன மீன்கள் மிக அதிகளவிலான வீதத்தில் புரதத்தினையும் விற்றமின்களையும் மற்றும் ஏனைய போசணைப் பார்த்தங்களையும் கொண்டிருப்பதால் மனித உடலுக்கு மிகவும் நன்மையான இயற்கையான உணவாக காணப்படுகின்றது. எமது நாட்டில் சூடை மீன்கள் உடனடி மீனாக (fresh fish ), குளிரூட்டப்பட்ட நிலையில், பதப்படுத்தப்பட்டு கருவாடாக, மீன் எண்ணெய் போன்ற பல் வேறுபட்ட நிலையில் உணவுக்காக பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

**சூடை மீன்களில் காணப்படும் உடலுக்கு நன்மையளிக்கும் பதார்த்தங்கள்**

**1.ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் (Omega-3- fatty acids)**

ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் என்பது ஒரு வகையான நிரம்பாத பல்பகுதிய கொழுப்பமிலமாகும் ( poly unsaturated fatty acids). இக் கொழுப்பமிலமானது மனித உடலினால் தொகுப்பட முடியாததாக காணப்படுவதால் உணவின் மூலம் அத்தியாவசியமாக எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ் அத்தியாவசியமான ஒமேகா -3 கொழுப்பமிலங்கள் சூடை மீன்களில் அதிகளவில் காணப்படுகின்றது.

இவ் ஒமேகா-3 கொழுப்பமிலங்கள் குருதியில் காணப்படும் ரைகிளிசரடைட்டின் (tri glyceride) அளவினை குறைக்கும் ஆற்றல் உடையதால் மனிதனுக்கு இதயம் தொடர்பான நோய்கள், பிரச்சினைகள் (Cardiac problem) ஏற்படுவதை தடுக்கின்றது. மேற்படி முடிவானது மீன் உணவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் மீன்களில் காணப்படும் ஒமேகா-3 கொழுப்பமிலங்கள், முடியுரு குருதியடைப்பு நோய், உயர் குருதியமுக்கம் போன்றன ஏற்படுவதை தடுப்பதுடன் மனிதனுக்கு ஏற்படும்மன அழுத்தங்களையும்குறைப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஒமேகா-3 கொழுப்பமிலங்களினை பெரிய வகை மீன்களிலிருந்து பெற்றுக் கொள்வதை காட்டிலும் சூடை போன்ற சிறிய வகை மீன்களின் மூலம் பெற்றுக் கொள்வது நன்மையானது. ஏனெனில் சிறிய மீன்கள் உணவுத் தொடரின் தாழ் போசணை மட்டத்தில் காணப்படுவதால் உணவுத் தொடரூடாக திரட்சியடையும் நச்சுப் பதார்த்தங்களின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக காணப்படும்.

**2. விற்றமின்கள்**

சூடை மீனில் மனித உடலுக்கு தேவையான விற்றமின்களான் விற்றமின் D, விற்றமின் $B_{12}$ காணப்படுகின்றது. ஆகையால் இச்சூடை மீன்களை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இவ் விற்றமின்களின் குறைபாட்டால் மனிதனுக்கு ஏற்படும் உடல் நல பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

**3. கனியுப்புக்கள்**

சூடை மீன்களில் கல்சியம் மற்றும் பொசுபரசு அதிகளவில் காணப்படுகின்றது. இவற்றில் கல்சியமானது என்புகளிற்கு உறுதித் தன்மையை வழங்குகின்றது. மேலும் பொசுபரசானது என்பு மச்சைகளின் உறுதியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

செல்வி.பிரியதர்சினி தர்மகுலசிங்கம்,
உதவி விரிவுரையாளர், மீன்பிடியிய் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

**4. அதிகளவிலான புரத உள்ளடக்கம் மற்றும் மிகக் குறைந்தளவான மாப்பொருள்**

சூடை மீன்கள் மற்றைய மீன்களுடன் ஒப்பிடும் போது சிறியதாயினும் அதிகளவான புரத உள்ளடக்கத்தினை கொண்டுள்ளது. ஆகையினால் இம் மீனை உணவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் அதிகரித்து வரும் புரத தேவையினை நிவர்த்தி செய்யலாம்.

அத்துடன் இம் மீன்களில் மிகவும் குறைந்தளவிலான மாப்பொருள் காணப்படுவதால் உணவுக் கட்டுப்பாட்டினை மேற்கொள்பவர்கள் தம் உணவில் இச் சூடை மீன்களினை சேர்த்துக் கொள்வது சிறந்ததாகும். மேலும் இம் மீனில் மாப்பொருளின் அளவு குறைந்தளவில் காணப்படுவதால் இம் மீன் உணவானது உடலில் காணப்படும் சீனியின் அளவை கட்டுப்படுத்தவும் உதவுகின்றது. (முற்றும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 74

$(10X+Y)^2 = 100X+10Z+Z$, $(10Y+X)^2 = 100Z+10Z+X$

**எனின் X,Y,Z இன் பெறுமானங்களை தருக?**

விடைகளை 12.11.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**து.பிரதீபன்**
ஆசிரியர், பிரிவு -A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 73 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஜெகதீஸ்வரன் அகிலன்,
வேலணை வடக்கு,
5 ஆம் வட்டாரம, வேலணை.

**புதிர் 73 இற்கான கேள்வியும் விடையும்:**

எட்டு எட்டுக்களை மட்டும் பயன்படுத்தி எண்கணித செயற்பாட்டின் மூலம் (கூட்டல்) 1000 (ஆயிரம்) எனும் எண்ணைப் பெறுவது எப்படி?

விடை:- 888 + 88 + 8 + 8 + 8

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 74**

சரியான விடை:-.......................................
முழுப்பெயர்:-.......................................
முகவரி:-.......................................
தொ.பே. இல:.......................................
கையொப்பம்:.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைதல் காரணமாகவே வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுகின்றன

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

புவி வெப்பமடைதல் காரணமாகவே அமெரிக்கா உட்பட பல நாடுகளில் சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. நியூயோர்க் நகரத்திற்கு ஏற்பட்ட அனர்த்தம் எதிர்காலத்தில் இலங்கைக்கும் ஏற்படலாமென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

உலக சனத்தொகை 7 பில்லியனாக உள்ள போதும் எரிசக்தி பயன்பாடு உலக சனத்தொகையை விட 120 மடங்காக அதிகரித்துள்ளது. எரிசக்தி பயன்பாடு அதிகரிப்போடு புவி வெப்பமடைவது அதிகரித்து இத்தகைய அனர்த்தங்களும் அதிகரித்துள்ளன.

மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பாக அரசாங்க ஊழியர்களை அறிவூட்டும் கூட்டம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர் புவி வெப்பமடைவது உயர்ந்துள்ள நிலையில் டே ஆப்டர் டுமாரோ திரைப்படத்தில் காட்டப்பட்டது போன்று நியூயோர்க்கிலும் நியூயோர்சி பகுதியிலும் நடந்துள்ளதாக கூறினார்.

புவி வெப்பமடைதல் அதிகரித்துள்ள நிலையில் அமெரிக்கா உட்பட பல்வேறு பிரதேசங்களை சேர்ந்த சுமார் 60 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடுகளின் முன்னேற்றம் அபிவிருத்தி என்பவற்றுடன் இணைந்ததாக எரிசக்தி பயன்பாடு அதிகரித்து புவி வெப்பமடைவது உயர்ந்துள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு இதுவே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

கோல், அனல் மின், எரிபொருள் பாவனை அதிகரிப்பால் புவி வெப்பமடைவது நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இதனுடன் பூமியிலுள்ள நீர் ஆவியாகி வருகிறது. இந்த நிலையில் வரட்சி, சூறாவளி, கடும்மழை என்பவற்றுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது. கால நிலையில் அடிக்கடி மாற்றம் நிகழ்ந்து வருகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புவி வெப்பமடைதலினால் ஏற்படும் மோசமான பாதிப்புக்களில் கடும் மழை, வெள்ளம், சூறாவளி, இடி, மின்னல், காலநிலை மாற்றம், சுனாமி போன்றன அடங்குகின்றன.

இவற்றின் பாதிப்பு அபிவிருத்தி அடைந்த நாடு, அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற பாகுபாடின்றி எந்த நாட்டிலும் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம் என்று எச்சரித்துள்ள அவர் கொழும்பையும் அதனை அண்மித்த பிரதேசங்களில் உள்ள தாழ் நிலங்களிலும் ஏனைய பகுதிகளிலும் இது தொடர்பான முன்னறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டார். (அ-2)

## முச்சக்கரவண்டி ரயிலுடன் மோதியதில் இருவர் பலி

மீரிகம கனேகொட புகையிரதக் கடவையில் முச்சக்கர வண்டியொன்று புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பலியானதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது. நகரங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் அதிவேக புகையிரதத்துடன் முச்சக்கர வண்டி மோதியே விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளைஞன் திடீரென மரணமடைந்துள்ளார். அராலி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஞானசேகரம் ராசகோபால் (வயது 22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த இரு நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை மரணமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் எலிக்காய்ச்சலினால் இறந்திருக்கலாம் என யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார். குறித்த இளைஞர் தனது வீட்டில் எலி வளர்த்து வந்ததாகவும் எலி வளர்ப்பினை அவர் தனது பொழுதுபோக்காக கொண்டிருந்ததாகவும் உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த இளைஞருக்கு டெங்குக் காய்ச்சல் அறிகுறி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

## கலாநிதி பட்டம் மோசடியானதா? அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

மோசடியான வகையில் பெறப்பட்டதாக கூறப்படும் கலாநிதி பட்டம் பற்றிய அறிக்கையை கொழும்பு குற்றவியல் பிரிவு எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முஹம்மட் கௌஸ் சுலைமான் சூபிக் என்பவர் போலி கலாநிதி பட்டத்தை பயன்படுத்துவதாக கொழும்பு குற்றவியல் பிரிவு ஓர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

புறக்கோட்டை பகுதியில் தனது கட்சிக்காரர் வியாபாரம் செய்து கொண்டிருந்த பகுதி பாதாள உலகத்தை சேர்ந்த ஒருவரிடமிருந்தே முன்னாள் உரிமையாளர் வாங்கியுள்ளார் என்றும் இதை கட்சிக்காரர் பல உயர் இடங்களில் முறைப்பாடு செய்தார். இதை விரும்பாத பொலிஸார் இவர் மீது போலியான வழக்கை சோடித்துள்ளதாக சட்டத்தரணி குறிப்பிட்டார்.

தனது கட்சிக்காரருக்கு கொழும்பில் நடந்த ஒரு விழாவில் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. இந்த விழாவில் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த முதல் பெண்மணி ஷிராந்தி ராஜபக்ஷவிற்கும் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது என கூறிய சட்டத்தரணி பட்டம் வழங்கிய விழாவில் எடுக்கப்பட்ட படங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

போலி கலாநிதி பட்டம் வழங்கியிருந்தால் பட்டம் வழங்கியவரை தண்டிக்க வேண்டுமே தவிர பட்டத்தை பெற்றவரை தண்டிக்கக் கூடாது என சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார். (அ-2)

## தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேசசபையின் முரசுமோட்டை பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகளை நூலகர் அறிவித்துள்ளார். இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**வாசிப்பு போட்டி**

**தரம் 3**

கீழ்ப்பிரிவு

அபிசிகா பாலகிருஷ்ணன் (கிளி/தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை), அன்பரசி அனுரகுமார் (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்), இளங்குமார் தனஞ்செயன் (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), வித்தியா சிவகுமார் (கிளி/ முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்)

**தரம் 4**

மத்தியபிரிவு

த.காருகானன் (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்), ப.தமிழ்வாணி (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்), ப.கிருசாளினி (கிளி/தருமபுரம் மகா வித்தியாலயம்)

**தரம் 5**

மேற்பிரிவு

க.டிலக்சனா (கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்), ஜெ.கௌதமி (கிளி/முருகானந்தா ஆரம்ப வித்தியாலயம்), றோ.வராகினி (தருமபுரம் மகா வித்தியாலயம்)

**கட்டுரைப்போட்டி**

**தரம் 6, 7, 8**

கீழ்ப்பிரிவு

ச.சஜீகா (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), க.அபிஷிகா (கிளி/முருகானந்தா கல்லூரி), அ.லக்ஷனா (கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்)

**தரம் 9, 10, 11**

மத்தியபிரிவு

க.தயாளினி (கிளி/முருகானந்தா கல்லூரி), செ.அபிராமி (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), இ.சர்மிளா (கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம்)

**தரம் 12, 13**

மேற்பிரிவு

ச.சர்வன் (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), ச.மஜிதா (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), இ.நித்தியா (கிளி/ முருகானந்தா கல்லூரி)

**பொதுஅறிவுப்போட்டி**

**தரம் 6, 7, 8**

கீழ்ப்பிரிவு

ச.சதுர்சிகன் (கிளி/முருகானந்தா கல்லூரி), க.அபிஷிகா (கிளி/முருகானந்தா கல்லூரி), வி.கிருபாகரன் (கிளி/ முருகானந்தா கல்லூரி)

**தரம் 9, 10, 11**

மத்தியபிரிவு

ச.சமீரா (கிளி/முருகானந்தா கல்லூரி), ப.டினுயா (கிளி/ முருகானந்தா கல்லூரி), மு.விதுஷா (கிளி/ தருமபுரம் மகா வித்தியாலயம்)

**தரம் 12, 13**

மேற்பிரிவு .

தி.தயந்திகா (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), ச.சர்வன் (கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), ப.நிவேதன் (கிளி/முருகானந்தா கல்லூரி). (அ-263)



இமை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இன்ரறக்ற் கழக (INTERACT CLUB) மாணவர்கள் பனை விதை நடுகைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் வேலணையில் இடம்பெற்றபோது ஆயிரக்கணக்கான தரமான பனம் விதைகள் சேகரிக்கப்பட்டு முதற்கட்டமாக நவக்கை குளப்பகுதியில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. இயற்கை பண்பாட்டு மரபு வளப் பாதுகாப்பு மையத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், இன்ரறக்ற் கழக பொறுப்பாசிரியர் த.யுகேஸ் ஆகியோரோடு மாணவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பனம் விதைகள் சேகரிக்கப்படுவதையும் விதை நாட்டப்படுவதையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பில்

# இந்தியா என்ன முடிவை எடுக்கப்போகிறது?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் முன்னாள் இலங்கையின் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் 1987 இல் இடம்பெற்ற ஒப்பந்தத்தின் மூலமாக ஏற்பட்ட 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கல் முழுமையாக தமிழர் களின் அரசியல் அபி லாசைகளை நிவர்த்தி செய்யவில்லை என்பது தமிழர் தரப்பினரின் ஆதங்கமாக இருந்தது.

தமிழர் தரப்பினரினால் ஏற்றுக்கொள்ள முடியாத அதிகாரங்களைக் கொண்ட இந்



தச்சட்டத்தைச் இலங்கை அரசு கிடப்பில் போட்டது. தற்போது இந்தச்சட்டத்தை அமுலாக்க வேண்டும் என்கிற கருத்தை இந்திய அரசும் பல்வேறு நாடுகளும் கூறிவருகின்றனர்.

இந்திய அரசினால் பரிந்துரைக்கப்பட்ட இச்சட்டத்தை அமுலாக்க இலங்கைத்தரப்பினர் எதிர்ப்புக்களை தெரிவித்து வரும் இவ்வேளையிலாவது இந்தியா திருந்துமா என்கிற வினாவே எழுகிறது.

தற்போது இலங்கையில் காணப்படுகின்ற அரசியல் சூழ்நிலைகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவை நிரந்தரமாக பாதிக்கும் அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதாக சமீபத்தில் இந்தியாவின் முன்னணி ஆங்கில நாளேடான த டைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் வெளியிட்ட கருத்தினை தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த நாளேடு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தீர்வுத் திட்டமான 13 ஆம் அரசியல் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோத்தபாய வலியுறுத்தி வருகிறார். எனினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வினை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக மஹிந்த த டைம்ஸ் ஒப் இந்தியாவுக்கு தெரிவித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் இரண்டு நாடுகளும் கூட்டறிக்கை ஒன்றையும் விடுத்திருந்தன. இந்த நிலையில் தற்போது இந்தச் சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பது இந்திய அரசாங்கத்தை அதிர்ச்சியிலும் கோபத்திலும் ஆழ்த்தி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டின் போது இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அண்மையில் மஹிந்த இந்தியா சென்றிருந்த போது பிரதமர் மன்மோகன் சிங் சீர்செய்ய முற்பட்ட போதும் அது சாத்தியமாகவில்லை என்று த டைம்ஸ் ஒப் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான டியூ. குணசேகர 13 ஆவது திருத்தத்தை ஆதரித்து கருத்து வெளியிட்டுள்ளார். அவர் கூறுகையில்,

நான் எதிர்க்கட்சியில் இருந்த போதும் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போதும் அதனை ஆதரித்தேன். அந்தத் திருத்தத்தை நீக்கினால் ஆயுதப் போராட்டம் மீண்டும் வெடிக்கும். 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களில் அதை ஆதரித்த ஒரு சிலரில் நானும் ஒருவர். நான் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த போதும் அதை ஆதரித்தேன்.

குணசேகர இது தொடர்பாக மேலும் கூறுகையில், இந்தத் திருத்தத்தின் பின்னர் விடுதலைப்புலிகளை தவிர சகல தமிழ் தீவிர இயக்கங்களும் ஆயுதங்களை கைவிட்டன. அதை நாம் இரத்துச் செய்தால் அவர்கள் மீண்டும் ஆயுதப் போராட்டங்களை தொடங்கக் கூடும். அதனால் பயங்கரவாதம் மேலோங்கும் .இவ்வாறான செயற்பாடுகளால் யுத்த வெற்றியாக கிடைத்த சமாதானத்தை பேண முடியாது. பிரச்சினைத் தீர்வுக்கான மாற்று ஏற்பாடின்றி 13 ஆவது திருத்தத்தை நீக்கி விடுவது அபத்தமானது என்றார்.

**கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இடம்பெறும் சம்பவங்கள் இந்தியாவுக்கு எதிராகவே நடைபெறுகின்றன என்பதனை இந்தியாவின் பகுத்தறிவாளர்கள் நன்கே அறிந்துள்ளார்கள். இனியாவது இந்தியா திருந்தாவிட்டால் அது இந்தியாவின் பொறுமைக்கு கேவலமாக அமைவதுடன் இந்தியாவின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட்டு விடும் என்பதை உணர்ந்து இந்தியாவின் நடுவண் அரசு அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்வதே சிறந்தது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படுகின்றது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

13 ஆவது திருத்தச் சட்டம் என்ற போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் நாட்டில் இனவாத முறுகல்களை உருவாக்க முயற்சிக்கின்றது. இலங்கையின் இராணுவ



த்திற்கு உதவ வேண்டாம் என சீனாவிடம் கோரியுள்ளனர். இது தேவையற்ற கோரிக்கையாகும். அரசாங்கம் ஒன்றின் கடமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யக் கூடாது.

மேலும் அவர் கூறுகையில்,

13 ஆம்திருத்தச் சட்டம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மிகவும் தைரியமானதும் நேரடியானதுமான கருத்தை வெளியிட்டுள்ளார். மாகாண சபை முறைமையானது ஈழத்திற்கான வழியாகவே அமைந்துள்ளது. போரின் மூலம் வெற்றியீட்ட முடியாதவற்றை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மேற்குலக நாடுகளுடன் இணைந்து மாகாண சபை ஊடாக வெற்றி பெற முயற்சிக்கிறது. எனவே 13 ஆம் திருத்தச் சட்டம் முற்று முழுதாக இரத்துச் செய்யப்பட வேண்டும். பௌத்த மதத்திற்கு எதிரான சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதனை எதிர்க்கவில்லை என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தேரரின் கருத்துக்களை மறுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை விட்டுள்ளது. அதில் இந்தியாவுக்கோ அல்லது சீனாவுக்கோ இலங்கையின் இராணுவத்துக்கு உதவிகளைச் செய்ய வேண்டாம் என்று எதுவித கருத்தையும் கூறவில்லை என்றும் தமது பேச்சுக்களின் மூலப்பொருளே ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிவர்த்தி செய்யும் அரசியல் அதிகாரங்களை வழங்கும் முகமாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்பதே என்றும் கூறியுள்ளனர். தமிழர்களுக்கு எதிரான விசமத்தனமான பிரசார வேலைகளை செய்வதை இலங்கை தலைமைகள் நிறுத்த வேண்டும் என்பது தமிழர் தரப்பினரின் கருத்தாக உள்ளது.

## இந்தியாவின் கருத்துத் தான் என்ன?

இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கும் வேளையில் இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் தமிழகத்தின் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒரு மடலை அனுப்பியுள்ளார். அதில் 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்த கருத்தை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.


தமிழகத்தின் நாடித்துடிப்பை அறியும் விதத்திலேயே இந்தியப் பிரதமரின் மடல் அமைந்துள்ளது. நியூடில்லியிலும் சென்னையிலும் இது குறித்த பரவலான கருத்துகள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக குறித்த சட்டத்திற்கு ஆதரவாக பலர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் இராமதாஸ் தெரிவிக்கையில், சிங்கள அரசு தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாகவே கருதி இதுவரை செயற்பட்டு வருகிறது. ஆனால் தற்போது வெளிப்படையாகவே தமிழர்களை மூன்றாம் தர குடிமக்களாக ஆக்கும் வேலைகளை செய்கிறது. இலங்கையில் 9 மாகாணங்கள் இருந்தன. பின்னர் 7 மாகாணங்களாக பிரிக்கப்பட்டு கிழக்கில் தமிழர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

தற்போது 5 மாகாணங்களாக பிரிக்கும் வேலைகளை இலங்கை அரசு செய்கிறது. இதன்மூலமாக தமிழர்களின் இடங்கள் சிங்களவர்களின் இடங்களுடன் இணைக்கப்படுமாயின் தமிழர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு அவர்களின் பூர்வீக தாயகமான வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமிழர் கள் சிறுபான்மையினராக ஆகும் நிலை உருவாகும். ஆகையால் சுதந்திரத் தமிழீழ த்தை அடைய உலக நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்று குரல் கொடுத்துள்ளார் மருத்துவர் ராமதாஸ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவின் துணைப் பொதுச் செயலாளர் மகேந்திரன் இது குறித்து தெரிவிக்கையில்,

இலங்கையில் குறித்த சட்ட திருத்தத்தை



இரத்துச் செய்வதற்கான முயற்சிகள் நடந்து வருவதை கடுமையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளார். இலங்கையுடனான உறவை பொருளாதார கண்ணோட்டத்தில் அல்லாது மக்கள் பிரச்சினையாக அணுக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் டி.கே. ரங்கராஜன் தெரிவிக்கையில்,

இலங்கையில் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வழி செய்ய இந்தியா ஏணைய சார்க் நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். அத்துடன் இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளதுடன் தனது கட்சி குறித்த சட்ட மூலத்தை சிங்கள அரசு இரத்துச் செய்யுமாயின் தனது எதிர் ப்பை தக்க தருணத்தில் காட்டும் என்றும் கூறியுள்ளார். இதுபோன்று பல்வேறு தலைவர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

இந்திய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை செவி சாய்க்கும் இந்திய நடுவண் அரசு இது குறித்து வெளிப்படையாக தனது கருத்தை இதுவரை தெரிவிக்கவில்லை. குறித்த சட்டத்தை அமுலாக்குவதன் மூலமாக இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுக்கலாம் என்று கூறி வருகின்றனர். ஆளும் காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் இதற்கு எதிர்ப்புக்களை தெரிவித்து வருகிறார்கள் சிங்கள தரப்பினர்.

இப்படியாக இரு நாடுகளுக்கும் இடையில் குறித்த 13ஆவது சட்டம் குறித்து கருத்து முரண்பாடுகள் இருந்து வருகின் றது. ஆனால் இந்தியா தொடர்ந்தும் மௌ னம் காத்து வருவதும் சிங்கள தரப்பினர் வெளிப்படையாக இந்தியாவுக்கு எதிராக பேசி வருவதும் இந்தியாவுக்கு சவாலாக அமைந் துள்ளது என்பது மட்டும் உண்மை.

ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு பின்னர் ஈழத் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளையே இந்திய நடு வண் அரசுகள் செய்து வருகின்றன. ராஜீவின் கொலையில் வேண்டப் பட்டு வரும் கே. பத்மநாதனை விடு தலை செய்து விட்டது இலங்கை அரசு. அத்துடன் இவருக்கு சிறப்புப் பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கி வரு வது இந்தியாவை சிறுமைப் படுத்தும் செயலாகவே பார்க்கப்படுகிறது. இப்படியாக இந்தி யாவுக்கு எதிராக செயற்பட்டு வருகிறது சிங்களம்.

எத்தனை காலம் தான் இழிவு வாழ்க்கை வாழ முடியும் என் கிற நிலையே இலங்கை விடய த்தில் இந்தியாவுக்கு இருக்கி றது. அது வெகு விரைவில் முடிவுக்கு வந்தாலே இந்தியாவின் மானம் மரியாதையைக் காப்பாற்ற முடியும். இல்லா விட்டால் குட்டித் தீவான இல ங்கை இந்தியாவின் இறை யாண்மைக்கே உலை வைத்து விடும் என்பதில் ஐய மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான அதிகார பரவலாக்கலே அரசியல் ஸ்திரத்தன்மைக்கு உதவும்

## மேல் மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

நியாயமான அதிகார பரவலாக்கல் மட்டும் தான் இந்த நாட்டின் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு உதவும். இதை மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகள் புரிந்து கொள்ள வேண்டும் என் மேல் மாகாணசபை உறுப்பினர் நல்லையா குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாஞானமோ தேரவாதமோ பின் வந்தவை புத்தரின் போதனைகள் ஒன்றுதான். அதை செம்மையாக போதிக்க வேண்டும். வன்முறைகளை போதி மாதவன் ஒரு பொழுதும் போதிக்கவில்லை.

சிங்கள பௌத்தர்கள் இன்று இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ தேவாலயங்களை தாக்குவதை உடன்நிறுத்தி பீடாசமயங்களுக்கிடையிலான, இனங்களுக்கிடையிலான நல்லுறவு ஏற்பட மரியாதைக்குரிய மல்வத்து அஸ்கிரிய பீடாதிபதிகள் போதிக்க வேண்டும்.

நாட்டின் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு நியாயமான அதிகார பகிர்வு மட்டுமே உதவும். அதனை மல்வத்து அஸ்கிரிய பீடாதிபதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

புத்தரின் போதனைகள் ஒருபோதும் ஏனைய மதங்களை, தேவாலயங்களை தாக்கச் சொல்லவில்லை. மல்வத்து அஸ்கிரிய பீடாதிபதிகள் தான் புத்த சமுதாயத்தை நெறிப்படுத்த முடியும். இதனைத்தான் இப் பல்லினம் வாழும் நாட்டில் நாம் எதிர்பார்க்கிறோம்.

கடும்போக்கான பௌத்தரான ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் ராஜீவ் காந்தியும் தான் இந்த 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் உருவாக உழைத்தவர்கள். அவர்கள் மகா சாணக்கியர்கள். அறிவிலிகள் அல்லர்.

அனைத்தையும் புரிந்து தானே செய்தார்கள். ஆனால் சரியாக அதை அமுல் படுத்த அவர்கள் இங்கு இல்லை.

இந்த 13 ஆவது திருத்தத்தின் குழந்தையான மாகாண சபைகளை இல்லாது செய்ய முயல்வது இந்நாட்டின் ஏனைய இனங்களுக்கு செய்யும் துரோகமாகும்.

இந்த மாகாணசபைகளை சிறப்புற செயற்பட மல்வத்து மற்றும்அஸ்கிரிய பீடங்கள் தான் அறிவுரை சொல்ல வேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆன்மீக செயலமர்வு

(மல்லாவி)

முல்லை.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நெறிப்படுத்தலில் இளைஞர் நலனில் அறநெறி என்னும் தொனிப்பொருளிலான ஆன்மீக செயலமர்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில நடைபெறவுள்ளதாக புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை மன்றத்தின் உத்தியோகத்தர் க.சிந்துஜன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மாங்குளம் பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர், முல்லை.மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர், மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-15)

# டெசோ தீர்மான கையளிப்பு காலநிலையால் பாதிப்பு

## ஸ்டாலின், பாலு லண்டனில்

(கொழும்பு)

இலங்கைத்தமிழர்களின் நலனை வலியுறுத்தி கடந்த ஓகஸ்ட் மாதம் திராவிட முன்னேற்ற கழகத்தினால் நிறைவேற்றப்பட்ட டெசோ தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையுடன் நியூயோர்க் செல்ல திட்டமிட்டிருந்தபடி அந்த கட்சியின் பிரமுகர்களின் பயணம் அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளது.

பொருளாளர் மு.க.ஸ்டாலின் மற்றும் நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு ஆகியோர் நேற்று முன்தினம் நியூயோர்க் சென்றனர்.

டெசோ தீர்மான அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிப்பதற்காகவே அவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை பயணமாகினர்.

எனினும் அமெரிக்காவில் சண்டி சூறாவளி மற்றும் காலநிலை மாற்றங்களால் வானூர்தி சேவைகள் பல இரத்து செய்யப்பட்டன.

இதனையடுத்து தி.மு.க. பிரமுகர்கள் லண்டனில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்ற கழக தலைவர் மு.கருணாநிதியும் இந்த பயணத்தில் பங்கேற்ற நிலையில் அவர் மருத்துவ சிகிச்சைக்காக லண்டனிலுள்ள வைத்தியசாலையொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் டெசோ சார்பில் மனுவொன்றை சமர்ப்பித்து விட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி லண்டனில் நடைபெறும் உலக, தமிழ் மாநாட்டிலும் மு.க.ஸ்டாலின் மற்றும் டி.ஆர்.பாலு ஆகியோர் கலந்து கொள்ள திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ரணிலின் ஆட்சி கால நீடிப்பு மஹிந்தவுக்கே சிறப்பு

## மாதுளுவாவே தேரர் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் தலைவர் பதவியை மேலும் 6 வருடங்களுக்கு நீடித்து கொள்வதன் மூலம் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை எனவும் அது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சிறந்த காலமாக இருக்கும் எனவும் நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பினர் ஸ்தாபகர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எந்தக்கட்சியும் கட்சியின் தலைவர் பதவியை இவ்வாறு நீடித்து கொள்வதில்லை எனவும் அது ஜனநாயகத்திற்கு விரோதமானது எனவும் அவ்வாறான கட்டளைச் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தனது பதவியை 6 வருடங்களுக்கு நீடித்து கொள்வது நாட்டுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்ற போதிலும் அது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சிறந்த காலமாக அமையும்.

இதுதான் நடக்கும் எந்த கட்சியும் இவ்வாறு தலைவர் பதவியை 6 வருடங்களுக்கு நீடித்து கொள்வதில்லை எனவும் மாதுளுவாவே சோபித தேரர் கூறியுள்ளார்.(அ-2)

# கண்டி மேயருக்கு அபாய எச்சரிக்கை

(கொழும்பு)

கண்டி மேயர் மஹேந்திர ரத்வத்தையை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அவருடைய வீட்டுக்கு மேலே அமைந்துள்ள கந்தெஹி கல் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாக அந்த நிறுவனம் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண்டி- ரஜபள்ளி வீதியில் அமைந்துள்ள மேயரின் வீடு கடந்த 2008 ஆம் ஆண்டு இவ்வாறு கல் சரிவால் பாதிக்கப்பட்டதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன கண்டி அலுவலகத்தின் பிரதானி விஜேவிக்ரம குறிப்பிட்டார். (அ-2)

# 62 நாட்களாக கடலில் தத்தளித்த மீனவர்கள்

## நாயாறில் கரை ஒதுங்கினர்

(கொழும்பு)

மீன்பிடி தொழிலுக்காகச் சென்று கடலில் சுமார் 62 நாட்கள் தத்தளித்த ஐந்து மீனவர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பின் நாயாறு பகுதியில் கரை ஒதுங்கியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த நாட்களாக சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பு காணப்பட்டபோதும் குறித்த மீனவர் எவ்வித ஆபத்தும் இல்லாமல் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நாயாறு கடற்கரையை வந்தடைந்துள்ளனர்.

நீர்கொழும்பு கடற்பரப்பின் ஊடாக கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்து மீனவர்களும் கடலுக்குச் சென்றுள்ளனர். இதனையடுத்து குறித்த மீனவர்கள் சென்ற படகின் இயந்திரம் நடுக் கடலில் பழுதடைந்துள்ளது.

62 நாட்களின் பின்னர் கரை திரும்பியுள்ள குறித்த மீனவர்களின் உடல் நிலையில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.(அ-2)






யா/சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உப்பைப் போன்ற பாசம்



ஒரு கர்வம் பிடித்த ராஜாவிற்கு ஏழு பெண்கள் இருந்தனர். அவர்கள் திருமணப் பருவத்தை எட்டியவுடன் மணமகன்களைத் தேடுவதற்கு முன் தன் பெண்கள் தன்னை எந்தளவிற்கு நேசிக்கின்றனர் என்று சோதிக்க ஆசைப்பட்டார். உடனே அவர்கள் அனைவரையும் தன் முன் அழைத்த ராஜா என் அருமைப் பெண்களே! நீங்கள் என் மீது எத்தனை பாசம் வைத்திருக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்றார்.

உடனே முதல் 6 பெண்களும் தங்களுடைய பாசத்தைப் பற்றி வானளாவ உயர்த்திக் கூறினர். ஒருத்தி அப்பா! உங்களைத் தேனைப் போல் நேசிக்கிறேன் என்று சொல்ல, ஒருத்தி உங்களைக் கரும்பைப் போல் நேசிக்கிறேன் என்று சொல்ல, மற்றொருத்தி உங்களைப் பாயாசம் போல் நேசிக்கிறேன் என் சொல்ல, ஒரே புகழ் மாலைகளாகக் குவிந்தன. ஆனால் கடைக்குட்டி மட்டும் அப்பா உங்களை உப்பைப் போல் நேசிக்கிறேன் என்றாள்.

அவளுடைய பதிலைக்கேட்டு ராஜா திடுக்கிட்டுப்போனார். என்ன? என்மேல் உனக்குப் பிரியம் அவ்வளவுதானா? நான் உப்பைப் போல் கரிக்கிறேனா? இதுதானா உன் பாசமா? என்று கோபத்துடன்கேட்க அவள் அப்பா நான் உண்மையைத்தான் கூறுகிறேன். உங்கள் மீது எனக்குள்ள அன்பு அளவிடமுடியாது என்றாள்.

ஆனால் அவள் மீது ராஜாவுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது. அவளைப் பழி வாங்க முடிவு செய்த ராஜா தனது முதல் 6 பெண்களுக்கு நல்ல இளவரசர்களாகத் தேர்வு செய்த பின்பு கடைசிப்பெண்ணுக்கு ஓர் ஏழை விறகுவெட்டியுடன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார். தன் தந்தையின் முடிவைக்கண்டு அதிர்ந்து போன கடைசிப்பெண் குமுறிக் குமுறி அழுதார். என்றாவது ஒரு நாள் அவருக்கு உண்மை தெரியும் என்று நம்பிய அவள் மௌனமாகத் திருமணத்திற்கு உடன்பட்டாள். திருமணத்திற்குப் பின் கணவனுடன் காட்டில் குடிசை அமைத்து வாழத்தொடங்கினாள். திருமணம் முடிந்த மறுநாளே விறகு வெட்டி தன் தொழிலைத் தொடங்க புறப்பட்டபோது இளவரசி வேலை முடிந்து திரும்புகையில் ஒவ்வொரு நாளும் எனக்கு ஏதாவது பரிசு கொண்டு வாருங்கள். அதன்மூலம் நமக்கு நல்ல காலம் பிறக்கும் என்றாள்.

இளவரசியே! தன்னை மணந்தது குறித்து பெருமிதத்தில் இருந்த விறகுவெட்டி அவளுக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தான். ஆனால் வேலை மும்முரத்தில்



பரிசைப் பற்றி மறந்து போக இருட்டி வீடுதிரும்பும்போதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. பரிசாக எடுத்துச் செல்லும் அளவிற்கு அவனுக்கு எதுவும் தென்படவில்லை. கடைசியில் ஏதோ நீளமான ஒன்று காலில் தட்டுப்பட அது கயிறாக இருக்கும் என நினைத்து அதையே வீட்டிற்கு கொண்டு சென்றான். அவன் குடிசையை அடைந்தபின் அந்தக் கயிறை இளவரசியிடம் தந்தான். அதைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

ஐயோ இது செத்தபாம்பு என்று கத்தினாள். ஐயோ போயும் போயும் இதையா என் மனைவிக்குப் பரிசாகக் கொண்டு வந்தேன் என்று விறகுவெட்டி வருந்த இளவரசி கவலைப்படாதே! அதைத்தூக்கி இப்போதைக்கு கூரைமேல் வீசி எறி. நாளை காலை அதை என்ன செய்வது என்று யோசிக்கலாம் என்றாள்.

அதேதினத்தன்று அரண்மனையில் பட்டத்துராணி மிகவும் சோகமாக இருந்தாள். தன் கடைசிப் பெண்ணின் தலைவிதியை நினைத்து நினைத்து அரண்மனை நந்தவனத்தில் உலவிக் கொண்டே மருவிக்கொண்டிருந்தவள் தன் கழுத்தில் இருந்து வைர அட்டிகை அவிழ்ந்து விழுந்ததைப்பார்க்கவில்லை. விண்ணில் பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று அட்டிகையை தன் அலகில் கௌவிக்கொண்டு பறந்துவிட்டது.

உயரே பறந்துகொண்டிருந்த கழுகின் கண்களில் விறகுவெட்டியின் குடிசையின் கூரை மீது இருந்த செத்த பாம்பு தென்பட உடனே வைர அட்டிகையை கூரையில் போட்டுவிட்டு பாம்மை எடுத்துச் சென்றது. அதற்குள் அரண்மனையில் ராணியின் அட்டிகை காணாமல் போனதால் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. அட்டிகையை கண்டு பிடிப்பவர்களுக்கு அவர்கள் விரும்புவது எதுவானாலும் தரப்படும் என்று ராஜா தண்டோரா போடச் செய்தார். அடுத்தநாள் காலை விறகுவெட்டி தன் வேலைக்குப் புறப்பட்டபோது தன் குடிசையின் கூரையில் ஏதோ பளபளவென்று மின்னுவதைக் கண்டு தன் மனைவியான இளவரசியை அழைத்தான். வெளியே ஓடி வந்த அவள் கூரையின் மேல் விழுந்திருந்த வைர அட்டிகையைக் கண்டு திகைத்துப் போனாள். அதை விறகுவெட்டி கூரையில் இருந்து எடுத்து அவள் கையில் தர அடடே! இது என் தாயின் அட்டிகை அல்லவா? இது எப்படி இங்கே வந்தது என்று ஆச்சரியத்துடன் குழம்பியவள் என்னுடைய தந்தை என்னைப் புரிந்துகொள்ளும் காலம் இத்தனை



சீக்கிரம் வரும் என்று நான் நினைக்கவில்லை என்றாள்.

அப்போது தூரத்தில் அரண்மனை ஆள் ஒருவன் தண்டோரா போட்டு வைர அட்டிகையைப் பற்றி அறிவிப்பது கேட்டது. அதைக்கேட்டதும் இளவரசியின் முகம் மலர்ந்தது. அவள் தன் கணவனை நோக்கி அரண்மனைக்குச் சென்று என் தந்தையைச் சந்தித்து இந்த அட்டிகையைக் கொடுங்கள். நீங்கள் யார் என்று அவருக்குத் தெரியாமல் மாறுவேடத்தில் செல்லுங்கள். அவரிடம் பரிசு எதையும் கேட்காதீர்கள். நாளைக்கு நம் வீட்டில் விருந்துண்ண வருமாறு அழையுங்கள். அதுவே போதும் என்றாள்.

அதன்படியே விறகுவெட்டி அரண்மனையை அடைந்து ராஜாவைச் சந்தித்து அட்டிகையைக் கொடுத்தான். மகாராஜா பாக்கியவசமாக மகாராணியின் அட்டிகையைக் கண்டுபிடித்தேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னதும் ராஜா அதைக் கையில் வாங்கிப் பரிசோதித்தார். அது ராணியின் நகைதான் என்று தெரிந்ததும் மிக்க மகிழ்ச்சியுடன் நீயார்? உனக்கு என்ன பரிசு வேண்டும்? நான் முன்னமே அறிவித்தபடி நீ எது கேட்டாலும் அதைப் பெறலாம் என்றார். மகாராஜா நான் ஓர் ஏழை விறகுவெட்டி. ஆனால் உங்களிடமிருந்து பரிசு எதையும் நான் விரும்பவில்லை. ஆனால் நீங்கள் நாளைக்கு தனியாக என் குடிசைக்கு வருகைதந்து விருந்துண்ண வேண்டும் என்று வேண்டினான்.

அதைக்கேட்ட ராஜா தர்மசங்கடத்திற்குள்ளானார். ஆனாலும் தான் முன்னமே அறிவித்தபடி அவன் வேண்டுகோளை மறுக்க முடியவில்லை. மறுநாள் ராஜா மட்டும் விறகுவெட்டியின் குடிசைக்குச் சென்றார். இளவரசி தன் முகத்தை ஒரு திரையினால் மறைத்துக்கொண்டு ராஜா முன்வந்து அவரை வணங்கினாள். ராஜாவினால் தன் பெண்ணை அடையாளம் கண்டுபிடிக்கமுடியவில்லை. பின்னர் ராஜா விருந்துண்ண அமர்ந்தார். அவருக்கு இளவரசி இனிப்புப் பண்டங்களாகப் பரிமாறினாள்.

அவற்றை அவர் உண்டபிறகு மீண்டும் இனிப்புகளையே பரிமாற அவருக்குத் திகட்டிவிட்டது. எனக்கு இனிமேல் இனிப்பு வேண்டாம். உப்புள்ள பண்டங்களை உண்ண என் நாக்குத் துடிக்கிறது. அவற்றில் ஏதாவது இருந்தால் கொண்டுவா என்றார் ராஜா. உடனே உப்பே இல்லாத உணவை அவர் முன் வைத்தாள். அதை உண்ட அவர் முகம் சுழித்து தட்டைத் தள்ளிவிட்டார்.



இதற்காகவே காத்திருந்த இளவரசி அவர் முன் வந்துநின்று தன் முகத்திரையை அகற்றி அப்பா அன்று ஒருநாள் உங்களை உப்பைப்போல் நேசிக்கிறேன் என்று சொன்னத்றகாக என் மேல் கோபம் கொண்டீர்கள். இப்போதாவது இனிப்பை எப்போதும் உண்ண முடியாது என்பதையும் உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதையும் புரிந்து கொண்டீர்களா என்றாள்.

ராஜா தன் தவறை உணர்ந்தார். இளவரசியை நோக்கி, மகளே உப்பின் அருமையை இன்று புரிந்துகொண்டேன். நீ தான் அனைவரையும் விட என்மீது பாசம் உள்ளவள் என்பதை புரிந்து கொண்டேன். நான் சொன்னேன் என்பதற்காக வசதியைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு ஏழையை மணந்து வறுமையில் வாடுகிறாய். என்னை மன்னித்துவிடு என்று கூறிக் கண்ணீர் வடித்தார்.

தன் பெண்ணின் பாசத்தைச் சரியாக உணர்ந்த ராஜா அவள் கணவனுக்கு தன் இராச்சியத்தின் ஒரு பகுதியை அளித்து ஆட்சி புரியச் செய்து அவனையும் மன்னனாக்கி அழகு பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலை குறித்து கே.பியிடம் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பில் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனிடம் விசாரணை நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சீ.பி.ஐ. அதிகாரிகளும் இந்திய புலனாய்வுப் பிரிவு முகவர்களும் அண்மையில் இலங்கைக்கு சென்று குமரன் பத்மநாதனிடம் விசாரணை நடத்தியுள்ளதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ராஜீவ் கொலையுடன் தொடர்பு உண்டா என்பது குறித்து குமரன் பத்மநாதனிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ராஜீவ் கொலைத் திட்டம் தொடர்பில் குமரன் பத்மநாதன் இந்திய அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எனினும் இந்தத் தாக்குதலுக்கான நிதி உதவிகள் எவ்வாறு கிடைக்கப் பெற்றன என்பது பற்றி தமக்குத் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். தாக்குதல் நடத்தப்பட்ட காலத்தில் இலங்கைக்கும் மலேசியாவிற்கும் விஜயங்களை மேற்கொண்டு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுடன் குமரன் பத்மநாதனுக்கு தொடர்பு இருக்கக் கூடும் என இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் இலங்கை மற்றும் மலேசியாவிடம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# சிறைக்கைதிகள் எதிர்கொள்ளும் மொழிப் பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்க் கைதிகள் தமது நீதித்துறை செயற்பாடுகளின் போது முகங்கொடுக்கும் மொழிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உடனடி நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்கப் போவதாகவும் குற்றப் பத்திரிகைகளை தமிழில் தயாரிக்கப் போவதாகவும் கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தமது வழக்குகள் தொடர்பாக நீதித்துறை செயன்முறைகள் தனிச் சிங்களத்தில் காணப்படுவதால் தாம் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக தமிழ்க் கைதிகள் சுட்டிக் காட்டினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டிருந்த தமிழ் சந்தேக நபர்களின் நீதிமன்ற செயன்முறையில் ஒரு புதிய ஒழுங்குகளைக் கொண்டுவர அமைச்சர் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் 359 பேர் இருப்பதாக நாடாளுமன்றத்தில் அரசாங்கம் கடந்த மே மாதம் அறிவித்திருந்தது.

இவர்களில் 309 பேரின் வழக்குகள் நிறைவடைந்துவிட்டதாகவும் அரசாங்கம் அதன்போது அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தொல்பொருள் ஆணையாளர் வாக்குமூலம் வழங்கவில்லை

## நீதவான் ரஷ்மி சிங்கப்புலி தெரிவிப்பு

தேசிய அருங்காட்சியகத்தில் புராதன பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் தொல்பொருள் ஆணையாளர் நாயகத்தின் வாக்குமூலத்தை அடுத்த தவணை விசாரணையின் போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் ஆணையாளர் நாயகம் இதுவரையில் வாக்குமூலம் வழங்கவில்லை என தெரிவித்த கொழும்பு பிரதான நீதவான் ரஷ்மி சிங்கப்புலி அவரது வாக்குமூலத்தினை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கடந்த 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரிடம் தடுப்பு காவல் உத்தரவிற்கு அமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விசாரணைகளை மேற்கொள்ளும் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

லன்சகே பிரியந்தல என்ற சந்தேக நபருடனும் இதற்கு முன்னர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுடன் பிரதான சந்தேக நபர் தொடர்புகளை வைத்துள்ளரா என்பது தொடப்பில் கண்டறிவதற்கு விசாரணைகளை மேற்கொள்வதாக அவர்கள் நீதிமன்றில் கூறினர்.

பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளமையினால் ஏனைய சந்தேக நபர்களுக்கு பிணை வழங்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குறிப்பட்டனர். அந்த வேண்டுகோளை நிராகரித்த நீதவான் பிணை மனு மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கூறினார்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-2)

# புனிதர்களின் பரிந்துரையோடு மரணித்த ஆன்மாக்களுக்காக ஜெபிப்போம்

நவம்பர் மாதம் என்றால் எம்முடன் வாழ்ந்து இவ்வுலகை விட்டு பிரிந்து சென்ற உறவுகளின் நினைவுதான் நிழலாகும். இவர்களுக்காக ஜெபிக்கும் போது புனிதர்களின் பரிந்துரையையும் வேண்டுகின்றோம். ஏனென்றால் நவம்பர் மாதம் முதலாம் திகதி எல்லாப் புனிதர்களின் நினைவோடும் திருவிழாவுடனும்தான் பிறக்கின்றது.

எனவே, எல்லாப் புனிதர்களின் பரிந்துரையோடும் அவர்களுக்காக ஜெபிக்கும், நினைவுகூறும் மாதமாக இம் மாதத்தை கடைப்பிடிக்குமாறு கத்தோலிக்க திருச்சபை சிறப்பான முறையில் கற்பிக்கின்றது.

என் வாழ்வு எனக்குச் சொந்தமல்ல; அது இறைவனுக்குத்தான் உரித்தானது. எனவே, இறைவனுக்கு ஏற்புடையவனாக வாழ்வதுவே சிறந்தது. அப்போது சாவிலும் வாழ்வைக் கண்டடைய முடியும்.

ஆம்! கிறிஸ்துவில் இறந்தால் சாவு எம்மை எதுவும் செய்ய இயலாது. சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன் (தி.பா.23:4) திருத்தூதர் பவுல் நாம் அவரோடு இறந்தால் அவரோடு வாழ்வோம் (2 திமொ 2:2-11) என கூறுகின்றார்.

இன்றைய காலத்தில் அன்றாடம் நாம் காணும் சாவுகளின் கோலங்கள், மர்மங்கள் வேதனை நிறைந்ததாகக் காணப்படுகிறது. கிறிஸ்துவின் சிலுவைச் சாவுதான் எமக்கு ஆறுதலாக அமைந்துள்ளது. என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் (யோவா 11:25) என்ற வாக்குறுதி கிறிஸ்தவர்களின் எதிர்நோக்காகவும் அமைந்துள்ளது.

இறந்தவர்களுக்காகச் ஜெபிக்கும் போது அவர்கள் மட்டில் எமக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் கடமையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. கல்லறையோடு முடிவது எமது அன்பும் உறவுமல்ல. மாறாக கல்லறைகளையும் கடந்து செல்ல வேண்டிய ஒன்றாக உள்ளது. இவ்வுலகில் செய்ய வேண்டிய பணி முடிந்தால் அவனை இறைவன் தம்மிடம் அழைத்து கொள்கின்றார். அதனால் எத்தனை நாள் உலகில் வாழ்ந்தோம் என்பதல்ல. எவ்வாறு வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம். இதனையே இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கிறார்.

இறந்தவர்களுக்காக ஜெபிக்கும் போது அதற்குப் பலன் உண்டு என்பதனை திருவிவிலியத்தில் பல இடங்களில் காண முடிகின்றது. இறைப்பற்றுடன் இறந்தோர் சிறந்த கைம்மாறு பெறுவர் என்று அவர் எதிர்பார்த்திருப்பாரெனில் அது இறைப்பற்றை உணர்த்



தும் தூய எண்ணமாகும். ஆகவே, இறந்தவர்கள் தங்கள் பாவத்தினின்று விடுதலை பெறும்படி அவர் அவர்களுக்காகப் பாவம் போக்கும் பலி ஒப்புக்கொடுத்தார் (2 மக் 12:45).

திருத்தூதர் சீமோன் பேதுரு இறந்த தபித்தா என்ற பெண் சீடருக்காக மன்றாடினார் (தி.ப. 9:36-43) திருச்சபையின் மூப்பரான ஜாண் கிறிஸ்தோஸ்தம் நாம் இறந்தவர்களுக்கு உதவியாக இருப்போம். அவர்களது நினைவு நாளை கொண்டாடுவோம். யோபின் பிள்ளைகள் அவர்கள். தந்தை செலுத்திய பலியால் தூய்மை பெற்றார்கள் என்றால் இறந்தவர்களுக்காக் நாம் செலுத்தும் பலியால் அவர்களுக்கு ஆறுதல் கிடைக்கும் அல்லவா? பின் எதற்காக நாம் சந்தேகப்பட வேண்டும்? இறந்தோருக்காக மன்றாடத் தயங்கக் கூடாது என குறிப்பிடுகின்றார். திருமறை ஏடும் இதனை வலியுறுத்துகின்றது.

உலகில் வாழ்பவர்களுக்கு தங்களது செபம் தான தருமம். குறிப்பாக திருப்பலி ஒப்புக் கொடுப்பதன் மூலம் இறந்த ஆன்மாக்களுக்கு உதவ முடியும். பதினொராம் நூற்றாண்டு முதல் திருச்சபை இறந்தோரின் நினைவாக திருப்பலி செலுத்துகின்றது. இறந்தோரின் ஆத்ம சாந்திக்காக ஜெபித்து வருகின்றது.

உத்தரிக்கும் நிலையிலிருக்கும் ஆன்மாக்களுக்கு இறைவனின் கருணை கிடைக்க வேண்டும். அவர்களின் ஆன்மாக்கள் முடிவில்லா மகிமையில் இளைப்பாற வேண்டுமென இறைவனிடம் பிரார்த்திப்போம்.

புனித மொனிக்கா சாகும் தறுவாயில் மகன் அகுஸ்தீனாரிடம் மகனே நீ என்னை எங்கு வேண்டுமானாலும் அடக்கம் செய்து கொள்; ஆனால், நீ பலி செலுத்தும் போது பலிப்பீடத்தில் என்னை நினைவில் கொள்ள வேண்டும் இது ஓர் தாயின் வேண்டுதல் மட்டுமல்ல. உயிர்ப்பைக் குறித்த விசுவாசமும் வெளிப்பட்டு நிற்கின்றது.

எனவே, இந்த நவம்பர் மாதம் இறை அருளின் மாதமாக அமைந்திட அதற்கேற்ற செயல்களைச் செய்வோம். இறப்பால் எம்மை விட்டு பிரிந்தவர்கள் மற்றும் நமக்குப் பிரியமானவர்கள் ஆகியோரை மறக்க முடியுமா? ஒருநாள் நாமும் இவ்வுலக வாழ்வை நீத்து மறுவுலகிற்கு செல்ல வேண்டும். இதனை மனிதில் பதித்து குற்றமற்றவர்களாக வாழ்வோம்.

செல்வி மே.ம.பெர்னான்டோ
யாழ்ப்பாணம்.

இறந்தவர்களை என்றும் எம் நினைவில் சுமந்து மனதில் பதித்து செபத்தில் தாங்கி வாழ்வோம். இவர்களின் இறப்புக்கள் எமக்கு பாடமாக அமையட்டும். அத்துடன் உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருக்கும் ஆன்மாக்களுக்காகவும் ஜெபிப்போம்.

# புத்தூர், ஊரணி கிராம மக்களுக்கு பிரதேச சபை குடிநீர் வழங்குகிறது

(புத்தூர்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர், ஊரணி கிராம மக்களுக்கு 30 வருடங்களுக்கு பின்னர் குடிநீர் விநியோகம் நேற்று முன்தினம் வலி.கிழக்கு பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புத்தூர், ஊரணி கிராம குடியேற்றத்திட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம் இற்றை வரை அக்கிராம மக்கள் குடிநீரை பெறுவதற்கு 2 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே பெற்றனர்.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பிரதேச வாழ் மக்களினால் வலி. கிழக்கு பிரதேச சபையிடம் குடிநீர் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பிரதேச சபையினால் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாள்தோறும் குறித்த கிராமத்திற்கு 3 ஆயிரம் லீற்றர் குடிநீரினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலி. கிழக்கு பிரதேச சபை தவிசாளர் அ.உதயகுமார் தெரிவித்தார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராய நேற்று விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்





யாழ்.மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நல்லூர் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பாரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராஜா உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சிவஞானம் சிறீதரன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டதோடு ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்குகொண்டிருந்தனர்.

யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இந்தக்கூட்டத்தில் இணைத்தலைவர் ஆளுநரின் உரை இடம் பெற்றது.

**ஆளுநரின் உரை**

ஆளுநர் தனது உரையில் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பல ஆயிரம் மில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டதாகவும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாணத்திற்கே நாட்டில் உள்ள மாகாணங்களில் அதிகளவு பணத்தை ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு பல திட்டங்களினூடாகவும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் மீள் குடியேற்றப்படும் பகுதிகளில் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

**அமைச்சர் டக்ளஸ் உரை**

ஆளுநரின் உரையைத் தொடர்ந்து அமைச்சர் உரையாற்றினார். அவரது உரையில் கடந்த மாதம் 8 ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் போது சகல விடயங்களையும் ஆராய்ந்து கொள்ளமுடியாததன் காரணமாக இந்த விசேட கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது கடந்த கூட்டறிக்கை வழங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்களினாலும் குற்றம் சாட்டப்பட்டதோடு கூட்டறிக்கையினை அங்கீகரிக்கவும் மறுப்புத்தெரிவித்ததன் காரணமாக விசேட கூட்டத்தில் அங்கீகரிக்கப்படுவதென முடிவெடுக்கப்பட்டது. அதன்பிரகாரம் கடந்த கூட்டறிக்கை சகலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. எனவே அந்தக்கூட்ட அறிக்கையில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமானால் செய்து கொண்டு கூட்டறிக்கையை அங்கீகரிக்கமுடியும் எனத் தெரிவித்து சபையின் அங்கீகாரத்திற்காக கூட்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தார்.

**கூட்டமைப்பின் வாதம்**

இதன்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவினால் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது.

அதாவது, கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது வலி. வடக்கு பிரதேசத்தில் இராணுவத்தினரால் தனியொருவருக்கு மின்சாரநிலையம் அமைக்க காணி கொடுக்கப்பட்டது தொடர்பாக ஆளுநரிடம் தான் கேள்வி எழுப்பிய விடயம் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றார்.

இதன்போது, வலிகாமம் வடக்குப் பிரதேசம் மட்டுமல்ல மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் பல கருத்துத் தெரிவித்தனர். எல்லாவற்றையும் கூட்டறிக்கையில் இணைத்துக்கொள்வது கடினம் என குறுக்கிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்.

இதற்குப் பதிலளித்த மாவை சேனாதிராஜா, நான் பேசியது மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பானது. தனியார் ஒருவருக்கு மக்கள் காணியை எவ்வாறு கொடுக்கமுடியும் என்றார்.

**சந்திரகுமார் எம்.பியின் வாதம்**

இதன்போது சிக்கலான விடயங்களும் தேவையான பல விடயங்களும் கடந்த கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. பல முடிவுகளும் எடுக்கப்பட்டன. நேரம் போதாததன் காரணமாக கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், சில ஊடகங்கள் கூட்டம் குழப்பியதாக தவறான செய்திகளை வெளியிட்டிருந்தன. அவ்வாறான தவறான செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதை நிறுத்த வேண்டும்.

அத்தோடு கூட்டத்தில் கதைக்கப்படும் அனைத்தையும் கூட்டறிக்கையில் இணைத்துக்கொள்ள முடியாது. இந்தக் கூட்டறிக்கையில் சில விடயங்கள் தவறவிடப்பட்டுள்ளன என்பது உண்மைதான்.

யாழ்.மாவட்டத்திற்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் தனித்தனியாக கூட்டம் நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வேண்டுகோள் விடுத்திருந்தார். அப்போது தேவைக்கு ஏற்றவாறு இரண்டு மாவட்டத்தையும் இணைத்தும் பிரித்தும் கூட்டம் நடத்தப்படும் என முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அந்த விடயம் இந்தக் கூட்டறிக்கையில் போடப்படவில்லை.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாகமூர்த்தி, கூட்டறிக்கையில் முக்கியமான விடயங்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றால் அப்போது அமைச்சர் ***பூவென்றும் சொல்லலாம் உறுப்பினர் சொல்வது போன்றும் சொல்லலாம்*** என்றார். இதன்போது அவை யில் சிரிப்பொலி எழுந்தது.

**வழிமொழிய மறுத்தது கூட்டமைப்பு**

இதனிடையே கூட்டறிக்கையினை முன்மொழியுமாறு அமைச்சர் கோரிக்கைவிட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் முன்மொழிந்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழிமொழிய மறுத்துவிட்டனர்.

இதன்போது சந்திரகுமார் கூட்டறிக்கையினை அவர்கள் வழிமொழியவில்லை என்றால் விருப்பம் இல்லாத ஒன்றை செய்வதாக எம்மீது குற்றச்சாட்டு வரக்கூடும் என்றார்.

உடனே அமைச்சர் ஏன் உங்களுக்கு இதில் உடன்பாடு இல்லையா என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்டார்.

உடனே தாங்கள் கூறிய விடயங்கள் இல்லாத கூட்டறிக்கையினை எவ்வாறு ஏற்கமுடியும் என மாவை சேனாதிராஜா கூறினார். ஏனைய கூட்டமைப்பின் உறுப்பினர்களும் அதனை வலியுறுத்தினர்.

இதனையடுத்து மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றினார். அதில் நல்லூர் பிரதேச சபை காணி விவகாரம், வலி. வடக்கு காணி விவகாரம், உயர் நீதிமன்றில் தன்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பிலும் கடந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என ஆளுநரிடம் முறையிட்டார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர், அறிக்கையில் திருத்தத்தை கொண்டுவர விரும்புகின்றீர்களா? அதை மட்டும்குறிப்பிடுங்கள். சொன்னதையேதிரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்காதீர்கள் என்று காட்டமாக கூறினார்.

இருப்பினும் மாவை எம்.பி. நிறுத்துவதாயில்லை தொடர்ந்து பேசிக் கொண்டே சென்றார். இதன்போது ஆளுநர் சந்திரசிறி உயர் பாதுகாப்பு வலயம் பாதுகாப்புடன் தொடர்புடையது. அந்தக் காணிகள் விடுவிக்கப்பட்ட பின்பே அது பற்றி பேச முடியும். நல்லூர் பிரதேச சபை காணி தொடர்பில்தான் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

இருப்பினும் கூட்டறிக்கையினை ஏற்க மறுத்த மாவை எம்.பி. தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இதன்போது குறுக்கிட்ட சந்திரகுமார் எம்.பி கடந்த கூட்டத்திலும் எல்லோரும் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் பேசினார்கள்.

சுமார் 2 மணித்தியாலம் இந்த விவாதம் இடம்பெற்றிருந்தது. எல்லாவற்றையும் கூட்டறிக்கையில் குறிப்பிட முடியாது என்றார். சுரேஷ் எம்.பியும் மாதகல் மீள்குடியேற்றம் தொடர்பில் பேசியிருந்தார் எனத் தெரிவித்தார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர், கடந்த கூட்டத்தில் பேசியவை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பதிவினை மீளவும் பரிசீலனை செய்து உங்களது கருத்து இணைத்துக் கொள்ளப்படும் என்றார்.

இவ்வாறு தொடர்ந்து கொண்டு [illegible] கூட்டறிக்கையினை அங்கீகரிப்பது தொடர்பான விவகாரத்தினை இடை நடுவே நிறுத்தி வைத்து விட்டு அடுத்த விடயத்திற்கு செல்வோம் என்றார் அமைச்சர்.

**கல்வி தொடர்பில் ஆராய்வு**

அடுத்த விடயமாக கல்வி எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வடக்கு மாகாண கல்வியமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றினார். தனது உரையில் யாழ்.மாவட்டத்தின் கல்விச் செயற்பாடுகள் கடந்த காலத்தினைவிட திருப்திகரமாகவுள்ளதாகவும் உயர் தகைமையுடைய மாணவர்கள் எமது மாவட்டத்தில் உள்ளனர் எனவும் கூறியதோடு தேசிய மட்டப் போட்டிகளிலும் ஒலிம்பியாட் போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர் என்றார்.

கல்வித்துறையை முன்னேற்றுவதற்கு பல மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை உள்ளதாகவும் பதிலீட்டு ஆசிரியர்கள் ஊடாக அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இதன்போது, மிகவும் கோபமாகக் கருத்துரைத்த சந்திரகுமார் எம்.பி, யாழ். மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை மேலதிகமாக வைத்துக்கொண்டும் சரியான முறையில் ஏன் அவர்களை பங்கிட முடியவில்லை. ஆசிரியர் வளப்பங்கீட்டை சரியான முறையில் செய்யமுடியாதுள்ளதற்கு என்ன காரணம்?

வலயத்திற்குள்ளேயே ஆசிரியர்கள் பங்கீடு சரியாக அமையவில்லை. ஒரு பாடசாலையில் ஐந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பாட அட்டவணையின்றி மேலதிகமாகவுள்ளனர். அதே வலயத்திலுள்ள இன்னொரு பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது எனச்சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த பிரதிச் செயலர், எமது மாவட்டத்தை பொறுத்தவரை ஆசிரியர் பற்றாக்குறை இல்லை. சில பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது.

இதற்குக் காரணம், எமது மாகாணத்தில் குறிப்பாக, யாழ். மாவட்டத்தில் பெண் ஆசிரியர்களே அதிகம். அதனால்தூர இடத்திற்கு இடமாற்றம் செய்ய முடியாதுள்ளது என்றார்.

இதன்போது தூர இடத்திற்கு இடம் மாற்றுவது தொடர்பில் நான் பேசவில்லை. வலயத்திற்குள்ளும் கோட்டத்திற்குள்ளும் ஏன் சரியாக ஆசிரியர்கள் பங்கிட முடியவில்லை என திரும்பக் கேள்வியெழுப்பினார்.

இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மழுப்பலான பதி லளித்தனர். அதற்குச் சந்திரகுமார் எம்.பி. அதிகாரிகளைக் கடிந்து கொண்டார்.

யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பிரதிச் செயலர் குறிப்பிட்டதற்கு மறுப்புத் தெரிவித்த பிரதேசசபையொன்றின் உதவித் தவிசாளர் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு கட்டுப்பட்டு நடந்த மாணவர்கள் தற்போது அவர்களைத் தாக்குகின்றனர். முரண்பட்டுக் கொள்கின்றனர். குடிபோதைக்கு அடிமையாகியுள்ளனர்.

உயர்தரம் கற்கும் மாணவர்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என ஆளுநரிடம் முறையிட்டார்.

இதன்போது யாழ்.மாவட்டத்தின் கல்வி முன்னேற்றம் தொடர்பாக விரிவான உரையொன்றை ஆற்றிய ஆளுநர், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறை 30 வருடங்களுக்குப் பின்பு அதிகளவான மாணவர்கள் இந்த மாவட்டத்தில் சித்தியடைந்துள்ளனர் என்றார்.

இதன்போது பிரதிச்செயலர் விக்னேஸ்வரன், கஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போது பெரும் சவால்களை எதிர்கொள்வதாகவும் வன்னி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவது போன்று ஆசிரியர்கள் பின்னடிக்கின்றனர் எனவும் கூறினார்.

பிரதிச் செயலரைத் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஆங்கிலம், விஞ்ஞானம், தொழில்நுட்பப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் மீள் ஒழுங்கு செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்றார்.

அத்தோடு ஆசிரியர் இடமாற்றத்தின் போது அரசியல் தலையீடு உள்ளதாக ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. அவ்வாறான தலையீடுகள் உள்ளதா? என அதிகா ரிகளிடம் வினவியதோடு யாருடைய தலையீடும் இன்றி ஆசிரியர்களுக்கு இடமாற்றம் இருக்கவேண்டும்.

இதனிடையே மாதகல் மேற்கில் அண்மையில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதியில் இருந்த பாடசாலை முற்றுமுழுதாக அழிவடைந்துள்ள தோடு கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது எனவும் அதனை விடுவிப்பதோடு பாடசாலை யினையும் மீளியக்க வைக்கவே ண்டுமென வலிகாமம் [illegible] மேற்குப் பிரதேச சபையின் தவிசா ளர் அ.ஜெபநேசன் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், தைமாதமளவில் குறித்த பாடசாலையை இயங்கவைக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

இவ்வாறு நேற்றைய கூட்டத்தில் மக்களின் மீள்குடியேற்றம், சுகாதாரம், கல்வி, வீதிப்புனரமைப்பு, உள்ளூராட்சி விவகாரங்கள் என பல்வேறு விடயங்கள் ஆராயப்படுவதோடு ஏனைய விடயங்களை ஆராய்வதற்கு இன்னொரு கூட்டம் கூட்டப்படும் எனக்கூறி நேற்றைய கூட்டத்தில் ஒத்திவைத்தார் அமைச்சர். கூட்டம் ஒத்திவைக்கப்படும்போது நேரம் பிற்பகல் 2.45 மணியை தாண்டி இருந்தது.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் மறுபடியும் எழுந்து நிற்கும் ஆற்றல் உடையதுதான் நீதி.
>
> *பிரையன்ட்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீதியை நசுக்கும் ஆட்சி அதிகாரக் கரங்கள்

ஒருவர் தன்னைத் தானே புகழ்தல் என்பதை விட கீழ்த்தரமான செயல் வேறெதுவுமாக இருக்க முடியாது. உனது புகழை, பெருமையை மற்றையவர்கள் கூற வேண்டும். அதுதான் அழகு.

அதேநேரம் ஒருவன் படைத்த சாதனையை புகழ எவரும் தவறக்கூடாது.

ஆனாலும் எங்கள் நாட்டில் இந்த இரண்டு விடயங்களிலும் முன்னையது நடக்கிறது. பின்னையது இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

சுருங்கக்கூறின் எது நடக்கக்கூடாதோ! அது நடக்கிறது. எது நடக்க வேண்டுமோ! அது திட்டமிட்டுத் தடுக்கப்படுகிறது.

இத்தகைய நடைமுறைகள் ஆட்சி பீடத்தில் அதிகம் எனலாம்.

இவை நாட்டின் முன்னேற்றத்திற்கும் நாட்டுப்பற்றுக்கும் குந்தகமானது என்பதை உணர வேண்டும்.

இவை ஒரு புறமிருக்க நீதியை நிலை நாட்டுதல் என்ற விடயத்தில் யார் விசுவாசத்துடன் செயற்பட்டாலும் அவரை தட்டிக் கொடுப்பது கட்டாயமானதாகும்.

பொலிஸ்சேவையில் ஊழலை ஒழிக்கப்போகின்றேன் என ஒரு அதிகாரி எழுந்தால், அவருக்கு வேண்டிய அத்தனை உதவிகளையும் செய்வது அனைவரதும் கடமை.

அதேபோல் நீதியை நிலைநாட்ட பாடுபடும் எவர் தொடர்பிலும் அவருக்கான ஊக்குவிப்புக்கள், ஒத்துழைப்புக்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இலங்கை திருநாட்டின் அரசாட்சியில் நீதியை நிலைநாட்டுவோருக்கு வழங்கப்படுகின்ற பரிசு, தாஜ்மஹாலை கட்டிய சிற்பிக்கு வழங்கிய தண்டனை போன்றது.

ஆம், உலகப் புகழ் பெற்ற தாஜ்மஹாலை கட்டிய சிற்பியின் இரு கரங்களையும் மன்னன் சாஜகான் துண்டித்துவிட்டான். எப்படி இருக்கிறது நிலைமை. இப்படித்தான் எங்கள் நாட்டிலும்.

நீதியை நிலைநாட்ட யார் முற்பட்டாலும் அவர்களுக்கு ஏதே ஒரு வகையில் அழுத்தம் கொடுத்து அவர்களை விழுத்தி விடுவது வழக்கமாகிவிட்டது.

இதில் இந்த நாட்டின் பிரதம நீதியரசர்களும் விலக்கல்ல.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயற்சித்த அரசு இப்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

நீதியை நிலைநாட்ட முற்பட்ட பிரதம நீதியரசருக்கு கிடைக்கப் போகும் பரிசை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆனாலும் பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது போல இந்த நாட்டின் அதி உச்ச பதவியில் யார் இருந்தாலும் அவர்களுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் வகையில் சட்டமூலகங்கள் திருத்தப்பட்டால் எதுவும் ஒரு எல்லையை தாண்டாமல் இருக்குமல்லவா?

# நாசகார சக்திகள் நாட்டை சீரழிக்க மக்கள் இடமளிக்கமாட்டார்கள்

## ஜனாதிபதி தெரிவிப்பு

நாசகாரசக்திகள் கடந்த காலங்களில் நாட்டுப்பற்றுள்ள முற்போக்கு அரசாங்கங்களுக்குச் செய்ததை தற்போதைய அரசாங் கத்துக்கும் செய்ய நினைத்தால் அதற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 50 ஆண்டு நிறைவையொட்டிய பொன்விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது ஐம்பதாண்டு நிறைவு ஞாபகார்த்த நினைவு முத்திரை, சிறப்பு மலர் ஆகியன ஜனாதிபதியால் வெளியிட்டு வைக்கப்பட்டன. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பாரிய அபிவிருத்தி நாட்டைக் கட்டியெழுப்புவது அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக அல்ல என குறிப்பிட்ட ஜனாதிபதி நாட்டினதும் மக்களினதும் எதிர்கால சுபீட்சத்துக்காகவே எனவும் அவர் தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை மிகக் குறைந்த விலைக்கு விற்று தமக்கு வேண்டியவர்களுக்கு அதனை பரிசளித்த யுகத்திற்கு முற்றுப் புள்ளிவைக்கப்பட்டுள்ளது. அரச வளங்களை பாதுகாப்பது தொடர்பில் அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்ந்தும் பாதுகாக்கப்படும்.

தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் செல்வந்தர்கள் சிலரது காப்புறுதி நிறுவ னமாக அல்லாது நாட்டு மக்கள் அனைவரினதும் காப்புறுதிநிறுவனமாக கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியம்.

நிறுவனங்களுக்கும் சமூகப் பொறுப்புகள் உள்ளன. எனவே இலாப ங்களை மட்டும் இலக்காக கொண்டு செயற்படாது சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அரச நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன்செயற்படுவதுமுக்கியமாகும்.

சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்புவ தற்கு நாட்டின் அரச நிறுவனங்கள் பலப் படுத்தப்பட வேண்டும் என்பதே எனது உறு தியான நம்பிக்கை.

பலம் படைத்த நாடுள் கூட கடந்த காலங்களில் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் நாம் பயங்கரவாத யுத்தத்திற்கு முகம் கொடுத்து கொண்டு நாட்டை பலப்படுத்தினோம்.

தேசிய காப்புறுதி கூட்டுத்தாபமானது காப் புறுதி நடவடிக்கைகளை மட்டும் மட்டுப்படுத் தாது நாட்டின் சுகாதாரம், நிர்மாணத்துறை, மின்சாரம், வர்த்தகத்துறை ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்கிறது.

நாம் நாட்டு மக்களின் நலன்கள் தொடர்பில் உச்ச அளவில் கவனம் செலுத்த வேண்டும். எதிர்கால பரம்பரைக்காக செய்ய வேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளன.

டி.பி இலங்கரத்ன இவ்வாறு சிந்தித்தே இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தை ஸ்தாபித்தார். இதனால்காப்பு றுதிக் கூட்டுத்தாபனம் நாட்டின் ஏழை மக்களது கூட்டுத்தாப னமாக வேண்டும்.

1962 ஆண்டு இந்த காப்புறுதி கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்த போது அன்றைய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனியார் துறையை விட அரசதுறைமூலம் நிறுவனங்களை சிறப்பாக முகாமைத்துவப்படுத்த முடியும் என தெரிவித்தார். அதனையே இன்றும் நாம் மக்களுக்குக் கூற விரும்புகி றோம்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 2002 ஆம் ஆண்டில் தனியார் மயப்படுத்தப்பட்டதுடன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் 2009 ஆம் ஆண்டு மீண்டும் அரசுடமையாக்கப்பட்டது என்றார். (அ-2)

# மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை

## சர்வதேச நீதவான்கள் பேரவை குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என சர்வதேச நீதவான்கள் பேரவை தெரிவித்துள்ளது.

குறிப்பாக மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் கிடைப்பதில்லை என சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கையின் நீதிச் சேவை அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பதாகவும் பல்வேறு தலையீடுகள் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பின் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

பாரியளவு மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கவில்லை என சுட்டிக் காட்டியுள்ளது. இலங்கையில் நீதித்துறை எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் தொடர்பில் 150 பக்க அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படுவதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பிலான சர்வதேச சட்டங்களை இலங்கை மதிக்கத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் இடம் பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக சுமத்தப் படும் குற்றச் சாட்டுக்கள் தொடர்பிலும் இது வரையில் உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை என குறித்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)




சைவசமய வழிபாட்டு நடைமுறைகளில் அர்ச்சனை செய்வது ஒரு முக்கிய செயற்பாடாக உள்ளது. பொதுவாக இன்று எல்லாக் கோவில்களிலும் அர்ச்சனைச் சீட்டுப்பெற்று அர்ச்சனை செய்விக்கும் வழக்கமே உள்ளது. ஒருவர் பிறந்த நட்சத்திரத்தையும் பெயரையும் கூறி அர்ச்சனை நடக்கும். அர்ச்சனை என்ற வடசொல் பூசை செய்தலைக் குறிக்கும். ஒருவருக்காகக் கடவுள் நாமங்கூறி மலர் முதலியன இடும் செயற்பாடாகும். கோயில்களில் கிரகப் பிரீதிக்காகவும் அர்ச்சனை நடைபெறும். இறைவனுடைய பெயர்கள் வடமொழியால் கூறப்படும். ஆனால் மணிவாசகர் இறைவனைத் தமிழால் வழிபட வழியைக் காட்டியுள்ளார். இறைவனுடைய நாமங்களையும் திருவருட் செயல்களையும் தமிழ் மொழியால் எடுத்துக்கூறி வழிபட வைத்தார்.

போற்றி என்ற சொல்லைப் பல முறை சொல்லி வழிபாடு செய்யும் முறைமையை நாயன்மார் எல்லோருமே தாம் பாடிய பாடல்களில் பதிவு செய்துள்ளனர். மணிவாசகர் போற்றித் திருவகல என 225 அடிகளில் பாடியுள்ள நெடும்பாட்டு தனித்துவமானது.

இப்பாடலில் போற்றி என்னும் சொல் நூற்றுக்கு மேலாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. பாடலின் நிறைவு

போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

என அமைந்துள்ளது. மூன்றடிகளிலேயே 7 முறை போற்றி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. போற்றி என்ற சொல்லுக்கு உரையாசிரியர் வணக்கம் என உரை செய்துள்ளார். ஆனால் போற்றி என்பது சொற்களால் இறைவனை வணங்குவதையே குறிக்கிறது. வணங்குதல் என்பது நுடங்கி நின்று வழிபடுவதாகும்.

இறைவனைப் போற்றி வழிபடுதல் என்பது ஒருவர் தானே செய்யும் அர்ச்சனையாக அமையும். அவ்வாறு போற்றி வழிபாடு செய்யும் இறைவனுக்கும் தனக்குமிடையேயுள்ள தொடர்பு பற்றியும் மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். அப்பனே என இறைவனை விளித்துப் பின்வருமாறு அர்ச்சிக்கின் றார்.

ஆதியும் அந்தமும் ஆனவனே போற்றி
தேவர்களுடைய மேலான பரம்பொருளே போற்றி
பெருங்கருணையாளனே போற்றி
என்னை நின் அடியனாக்கினாய் போற்றி
உடைய நாதனே போற்றி

மணிவாசகர் தன்னுடைய இறையனுபவத்தை மீண்டும் மீண்டும் சொல்லி வழிபாடுசெய்கிறார். இறைவனைதன்னை அடிமையாக உடைய தலைவன் எனக் குறிப்பிட்டுள்ளார். தனக்குப் பற்றுக் கோடாக வேறு யாருமில்லை எனக் கூறுகிறார். அவர் உலகியல் வாழ்வில் தனி யனாக இருப்பதை சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறார். மிகவும் கடையவனாகத் தான் இருப்பதால் தன்னைக் காக்க வேண்டும் என நினைக்கிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனை வழிபடும் போது எம்மை நாம் தாழ்த்தியே வழிபடவேண்டும். இறைவனே எமக்குப் பற்றுக் கோடாக இருப்பவன். அவனிடம் அடைக்கலமாவதே வழிபாட்டின் பயன் என்பதையும் பாடல் மூலம் உணர்த்தியுள்ளார்.

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன்போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடியனாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சங்கானைக் கோட்ட மட்ட உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

சங்கானை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்ட சுற்றுப் போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தது. இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

14 வயது பிரிவில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி முதலிடத்தையும் யாழ்ப்பாண கல்லூரி இரண்டாமிடத்தையும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

16 வயது பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் முதலிடத்தையும் அராலி இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தையும் வட்டு. இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. 18 வயது பிரிவில் வட்டு. மத்திய கல்லூரி முதலிடத்தையும் விக்டோரியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும் வட்டு. இந்துக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.



# வடமராட்சியின் பொன் அணிகளின் போர்; நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வெற்றி

சிதம்பராக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போரில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கும் சிதம்பராக் கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் கிரிக்கெட் போர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியானது பொன் அணிகள் போர், வடக்கின் மாபெரும் போர் போன்ற போட்டிகளைப் போல் நடைபெற்றது. மழை காரணமாக 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக விளையாடப்பட்ட மேற்படி போட்டியில் முதலில் சிதம்பரக் கல்லூரி துடுப்பெடுத்தாடியது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீரன் பிரசாத்தின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாமல் சிதம்பரக் கல்லூரி அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. 19 ஓவர்களில் சிதம்பரக் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சார்பாக ஆர்.பிரசாத் 17 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 59 என்ற இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். டிலாலன், துவாரகன் ஆகியோரின் துடுப்பாட்டத்தினால் வெற்றியை 15 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் சார்பாக டிலாலன், துவாரகன் ஆட்டமிழக்காமல் முறையே 33 மற்றும் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

# விபுலானந்தர் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; திருக்குடும்பக் கன்னியர்மடம், இந்துக் கல்லூரி சம்பியன்

விபுலானந்தர் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடமும் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் சம்பியனாகியுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் மாணவ முதல்வராக இருந்து கடமையின் போது உயிரிழந்த பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.


யாழ். மாவட்ட 19 வயது பிரிவினருக்கிடையில் மேற்படி கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்று வந்தது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் மழைக்கும் மத்தியில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியினை எதிர்த்து யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மோதியது. ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய திருக்குடும்பக் கன்னியர்மடம் புள்ளிகளை இலகுவாகப் பெற்றுவந்தது.

இறுதியில் 37:23 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனாகியது. ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் மோதின.

மிகுந்த போட்டிக்கு மத்தியில் இந்த ஆட்டம் நடைபெற்றது. இறுதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 52:44 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான மூன்றாமிடத்தினை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெண்களுக்கான மூன்றாமிடத்தினை இராமநாதன் மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை கொலை செய்தவருக்கு 20 வருட சிறைத் தண்டனை!

### யாழ். மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவரினை கொலை செய்து அவர் அணிந்திருந்த தங்கநகை ஆபரணங்களினை திருடிய நபர் ஒருவருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி அல்லது அதனை அண்டிய காலப் பகுதிகளில் நாரந்தனை ஊர்காவற்றுறையினை சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தரான திலகராஜா ஜெகத்ஜனனி என்ற குடும்பப் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதோடு அவர் அணிந்திருந்த தங்க நகைகளான காப்பு, தாலிக்கொடி, சங்கிலி என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

இப்படுகொலையோடு தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த திருஞானம் பிள்ளை சிவகுமார் அல்லது வேலு எனப்படுபவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த நபருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் குறித்த வழக்கு சட்ட மா அதிபரின் ஆலோசனையுடன் யாழ்.மேல் நீதிமன்றில் 2005 ஆம் ஆண்டு பாரப்படுத்தப்பட்டு கடந்த 7 வருடங்களாக விசாரணை இடம் பெற்றது. இவ் விளக்கத்தின் பின்னர் நேற்றைய தினம் தீர்ப்பிற்காக யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் குறித்த எதிரியால் நிகழ்த்தப்பட்ட குற்றம் நியாயமான சந்தேகங்களுக்கப்பால் நிருபிக்கப்பட்டமையால் முதலாவது குற்றச்சாட்டான குறித்த பெண்ணை படுகொலை செய்த குற்றச்சாட்டிற்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 2வது குற்றச் சாட்டான குறித்த பெண்ணின் தங்க நகைகளினை கொள்ளையடித்தமைக்கு 10 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்ததோடு குறித்த இருசிறைத் தண்டனையினையும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் மன்று கட்டளை இட்டுள்ளது.

குறித்த எதிரி அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்பதோடு கொலையுண்ட பெண்ணின் கணவர் முன்னாள் அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## கைதிகளை கைமாற்ற இலங்கை இணக்கம்

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கைதிகளில் 10 பேரை கைமாற்றிக் கொள்வதற்கு இலங்கை முன்வந்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் ஓர் பகுதியின் அடிப்படையிலேயே கைதிகளை பரிமாறுமாறு புது டில்லி ராஜதந்திர ரீதியில் கொழும்புக்கு தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைச் சிறைகளில், தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்தவர்களே கூடுதலாக இருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு எதிராக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தல் மற்றும் சர்வதேச கடல்எல்லையை மீறியமை போன்ற குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ-11)

# பல்கலைக்கழகத்தினுள் பாம்புப் புற்று!

### அகற்றுமாறு அமைச்சர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலுள்ள பாம்புப் புற்றினை அகற்றுமாறு யாழ். மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்த உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் ஒத்திவைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளரும் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவனுமான அ.ஜெபநேசனால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே அமைச்சரினால் மேற்படி உத்தரவு போடப்பட்டது.

பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆங்கிலக் கல்வி கற்கும் அறையினுள்ளேயே மேற்படி பாம்பு புற்றுள்ளதாக ஜெபநேசன் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்ட போது யாழ்.பல் கலைக்கழகம் சார்பாக பதிவாளர் சமுகமளித்திருந்தார்.

அத்தோடு யாழ்.பல்கலைக்கழகம் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்ட போது நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் உரையாற்ற எழுந்தபோது உங்களுக்கு நடந்த சம்பவத்தை யார் செய்திருந்தாலும் அது மிகப்பெரும் பிழை அதற்கான கண்டனத்தையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிப்பதாக அமைச்சர் கூறினார்.

இதேவேளை வடமராட்சி மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இலங்கை மின்சார சபையினரிடம் அமைச்சர் கேள்வி எழுப்பியதுடன் அப்பகுதி மின்சார சபை ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென வட மாகாண பிரதான பொறியியலாளருக்குப் பணித்தார். (ந-6)

## வயோதிபப் பெண் மீது இளைஞன் பலாத்காரம்

(கரவெட்டி)

வயோதிபப் பெண்ணொருவர் மீது இளைஞன் ஒருவர் பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டதனால் குறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

65 வயதுடைய வயோதிபப் பெண் மீது 25 வயதுடைய இளைஞன் ஒருவரே குறித்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவிலேயே மேற்குறித்த பல்ாத்கார சம்பவம் நடைபெற்றது.

பிரஸ்தாபப் பெண் அருகில் உள்ள கடைக்குச் சென்றவேளை மதுபோதையில் வந்த இளைஞன் அவரின் வாயில் துணியால் அடைத்து ஆள்நடமாட்டம் இல்லாத பகுதிக்கு இழுத்துச் சென்று பலாத்கார முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

சம்பவத்தில் ஈடுபட்ட குறித்த இளைஞன் அதேயிடத்தினைச் சேர்ந்தவர் என தெரிய வருகின்றது.

பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் மருத்துவ பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-24)

# தண்ணீர் போத்தல்வரை...

இந்தக் கூட்டத்தில் சமுர்த்தித் திட்டம் தொடர்பாக ஆராயப்பட்ட போது யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஷ்வரனால் அறிக்கையொன்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் 54 ஆயிரத்து 199 குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தினால் பயனடைகின்றன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, திவிநெகும சட்டமூலத்திற்கு எதிராக போடப்பட்ட வழக்கு வெற்றி பெற்றால் இந்த சமுர்த்தி பயனாளிகளின் நிலையென்ன என கேள்வி எழுப்பினார்.

அதற்கு உதவி ஆணையாளர் பதில் கூற தாமதித்ததோடு அது தொடர்பில் நான் எதுவும் கூற முடியாது என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், திவிநெகுவிற்கும் சமுர்த்திக்கும் தொடர்பில்லை சமுர்த்திக்கு எதிராக நாம் வழக்குப் போடவில்லை என்றார்.

வாழ்வின் எழுச்சி என அழைக்கப்படும் திவிநெகும திட்டத்திற்குள்ளேயே சமுர்த்தி திட்டமும் வருகின்றது. வழக்கு வெற்றி பெற்றால் சமுர்த்திப் பயனாளிகள் பாதிப்படைவார்கள் என அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், மக்கள் நலத்திட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல நாம் என்றார்.

இதன்போது இராணுவத்தினரால் நில அபகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகக் கூறி அதற்கு எதிராக வழக்குப் போட்டதும் தற்போது திவிநெகுமவிற்கு எதிராக வழக்குப் போட்டதும் உங்களது அரசியலுக்காகவே.

மக்களின் காணிகளை காப்பாற்றுவதை விட உங்களது காணிகளைக் காப்பாற்றும் நோக்குடனேயே வழக்குப் போட்டீர்கள் என்றார் சந்திரகுமார் எம்.பி.

இவ்வாறு சந்திரகுமார் கூறியதைப் பொறுத்துக் கொள்ளாத சிறிதரன் எம்.பி, மக்களுக்காகத்தான் நாம் வேலை செய்கின்றோம். அவர்களின் நலனுக்காகவே வழக்குப் போட்டோம். உங்களைப் போன்று காட்டிக் கொடுத்து வாழ்பவர்களல்ல நாம் என்றார்.

இதன்போது புதுமாத்தளன் மக்களைக் கொண்டு சென்று அழித்தது யார்? பாடசாலை அதிபராகயிருந்தபோது பிரசாரத்திற்கு துணைபோய் பெருந்தொகையான மாணவர்கள் இறப்பதற்கு காரணமானவர்கள் யார்? என சிறிதரன் எம்.பியிடம் கேள்வி எழுப்பினார் சந்திரகுமார் எம்.பி.

இவ்வாறு இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது கைகளில் தண்ணீர்ப் போத்தல்களை எடுத்து மேசையில் அடித்துக் கொண்டதோடு தாக்குதல் மேற்கொள்ளவும் முயற்சித்தனர். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் திவிநெகும தொடர்பில் யாழ். மாவட்டத்தின் சமுர்த்தி உத்தியோகத்தர் விளக்கமளிப்பார் என்றார்.

குறித்த உத்தியோகத்தர் அமைச்சரின் பணிப்பிற்கமைய திவிநெகும தொடர்பிலும், சமுர்த்தி திட்டம் தொடர்பிலும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு பாடம் நடத்தத் தொடங்கினார்.

உத்தியோகத்தர் பேசத் தொடங்கியதும் திவிநெகும தொடர்பில் ஏன் நாங்கள் வழக்குப் போட்டோம் என்பது தொடர்பில் உங்களுக்குத் தெரியுமா? என உத்தியோகத்தரிடம் கூட்டமைப்பு எம்.பிக்கள் கேள்வி எழுப்பியதோடு உங்களது விளக்கம் எமக்குத் தேவையில்லை எனக்கூறியதோடு ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் தானே நீங்கள் எனவும் கடிந்து கொண்டனர்.

இவ்வாறு திவிநெகும தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் கடும் வாக்குவாதம் இடம் பெற்றது. (எ-6)

# உரிய புகழ் கிடைக்கா...

துணை இராணுவக் குழுக்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களைத்தமை தொடர்பில் தமக்கு கிடைக்க வேண்டிய புகழ் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியினால் சமூகம் பாரியளவு நன்மைகளை அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களும் இயல்பு வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக்குடன் நடைபெற்ற சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி இந்த சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லெண்ணத்துடன் புலம் பெயர் தமிழர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டால் வடக்கு கிழக்கை மீளக் கட்டியெழுப்ப நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிளேக் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஆரம்பிக்க முயற்சி எடுக்குமாறு அவர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் வரையிலும் அரசியல் தீர்வுத்திட்டம் மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்து யோசனைத் திட்டத்தை முன்வைப்பதனை ஏன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலம் தாழ்த்தி வருகின்றார் என பிளேக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி அதிகாரப்பகிர்வினை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். எனினும் 13ஆம் திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

காவல்துறைச் சேவையில் அதிகளவு தமிழர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## ஜூரி ஆணைக்குழு...

அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இலங்கையில் நீதித்துறை பாதுகாக்கப்பட வேண்டும் என சர்வதேச ஜூரி ஆணைக்குழுவின் ஆசியப் பணிப்பாளர் ஷேம் சராசி தெரிவித்துள்ளார். (எ-11)

# பிரதம நீதியரசர்...

கீழ் கொண்டுவருவதற்கான ஒரு சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை தாமதப்படுத்திய ஷிராணி பண்டாரநாயக்கவின் ஒரு நீதிமன்றத் தீர்ப்பு அரசாங்கத்தை மிகுந்த கோபத்துக்கு உள்ளாக்கியிருந்தது.

பெருமளவும் நிதியை இலங்கை ஜனாதிபதி யின் சகோதரரான அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டுக்கு இந்த சட்டமூலம் கொண்டு வரும் என்று கூறப்பட்டது.

இந்த சட்டத்தை தாமதப்படுத்தக் கூடிய ஷிராணி பண்டாரநாயக்காவின் தீர்ப்புக்கு எதிரான ஒரு வீதி ஆர்ப்பாட்டத்துக்கும் பசில் ராஜபக்ஷ தலைமை தாங்கியிருந்தார்.

சில வாரங்களின் பின்னர் அரசாங்கம் நீதித்துறையில் தலையீடு செய்வதாக கருத்துக் கூறிய மற்றுமொரு மூத்த நீதிபதி கைத் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டார்.

அத்துடன் சில நீதிபதிகளின் உயிரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியதாக சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. நீதிபதி அச்சுறுத்தப்பட்டது தொடர்பான வழக்கு இன்னமும் தீர்க்கப்படாமலே இருக்கிறது. சம்பந்தப்பட்ட நீதிபதியும் தலைமறைவாகியுள்ளார். பயம் காரணமாக அது இருக்கலாம்.

ஜனாதிபதியின் அதிகரித்துவரும் அதிகாரங்கள் சட்டத்தின் ஆட்சியை குறைத்து மதிப்பிடுவதாக பல சர்வதேச உரிமைக் குழுக்கள் விமர்சித்துள்ளன. ஆனால் அரசாங்கம் தனது நடவடிக்கைகள் நியாயமானவையே என்று வாதிடுகிறது.

இதேவேளை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் பலவந்தமாக கையொப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றும் யோசனை சாதாரண சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களின் கருத்து அல்ல என ஜே.பி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)

# போர்க்குற்ற...

பிக்க சர்வதேச மன்னிப்புச் சபை முயல் வதாகச் சொல்லப்படுகின்றது.

இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்கள் மற்றும் சட்டத்துக்கு புறம்பான வகையில் போராளிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை இது வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

இந்தப் பாரிய நடவடிக்கையை, இந்தியாவில் உள்ள சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கொண்டு வருகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்க விடயமாகும். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு கொடுத்தது, போரால் இடம்பெயர்ந்தோர்களை மீள்குடியேற்றம் செய்தது, வடக்கே மிதிவெடிகளை அப்புறப் படுத்தியது, உள்நாட்டுக்குள் ஏற்படுத்தப்பட்ட படிப்பினைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிகள், பெண்கள் மற்றும் சிறார்களின் உரிமைகளை பாதுகாக்க எடுக்கப்படும் முயற்சிகள் போன்ற நடவடிக்கைகளைப் பட்டியலிட்டார்.

இலங்கைக்குள் உள்ளேயும் வெளியேயும் சில'சக்திகள் நாட்டை சீர்குலைக்க முனைவதாக அவர் குற்றம் சாட்டினார். கடத்தப்பட்டு காணாமல் போவோரின் எண்ணிக்கை உயர்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

வட மாகாணத்தில் இராணுவப் பிரசன்னம் பற்றிப் பேசிய அவர், போரின் முடிவுக்குப் பிறகு இராணுவத்தின் எண்ணிக்கை வட மாகாணத்தில் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலோ, வன்னியிலோ இராணுவத்தின் பிரசன்னம் மக்களின் வாழ்க்கையில் குறுக்கிடுவதாக இல்லை. இராணுவம் மக்களுக்கு பல விதத்தில் உதவியுள்ளது.

சுகாதார வசதிகளை வழங்கியது மட்டுமல்லாது இராணுவம் தன் சொந்தச் செலவில் 4 ஆயிரத்து 652 நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது என்றார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவம் பல மனித உரிமை மீறல்களைச் செய்தது-நிராயுதபாணிகளைக் கொன்றது போன்ற குற்றச்சாட்டுக்கள் மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் நிலையில் இது குறித்து இராணுவமே விசாரித்து வருகின்றது. பொதுமக்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள், சனல் 4 வீடியோ குறித்தும் தெரிவித்த கருத்துக்கள் குறித்து படிப்பினைகள் ஆணைக்குழு அளித்த பரிந்துரைகளை இராணுவம் விசாரித்து வருகின்றது.

இதுவரை இந்த ஆணைக்குழு 30 முறைக்கு மேல் கூடியுள்ளது. பலரை விசாரித்துள்ளது. சுமார் 50 சம்பவங்களை இந்த இராணுவ நீதிமன்றம் விசாரிக்கிறது. இராணுவம் சிவிலியன்களுக்கு இழப்பை ஏற்படுத்தியதா, மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியதா, பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதா போன்ற விடயங்கள் குறித்தும்,

சனல் 4 வீடியோ உண்மையா இல்லையா என்பது ஒருபுறமிருக்க அதில் காணப்படுவோரை அடையாளம் காண முடியுமா போன்றவை குறித்தும் அது விசாரிக்கும் .

படிப்பினை ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் இராணுவத்திற்கு பொருந்தக்கூடிய விடயங்கள் என்ன என்பதை ஆராய்ந்து அதை அமுல்படுத்தும் திட்டத்தை உருவாக்கவும் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையும் இதேபோன்று செய்துள்ளது. நான் கேட்கிறேன் இது முன்னேற்றமில்லை என்றால் எது முன்னேற்றம் என்றார் சமரசிங்க.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமாகவே அரசியல் தீர்வு என்ற அரசின் நிலைப்பாடு இங்கு மீள் வலியுறுத்தப்பட்டது. சிவில் நிர்வாகம் வடக்கே மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அடுத்த கட்டமாக அங்கு தேர்தல் நடத்துவது குறித்து யோசிக்கப்படும் என்றும் இலங்கை அரசின் சார்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இனி அரச சேவைக்கு சேர்பவர்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழி பேசுபவர்களாக இருக்க வேண்டும் என்ற நிலையை அரசு அமுல்படுத்தி வருவதாகவும் அரசு சார்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### அமெரிக்கா கருத்து

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இலங்கை அரசு தான் ஏற்கெனவே முன்வைத்த வாதங்களைத்தான் இன்றும் முன்வைத்துள்ளது. புதிய யோசனைகளையோ திட்டங்களையோ அது முன்வைக்கவில்லை

பிற நாடுகள் இலங்கையை குறைகூறும் முன் அங்கு போர் நடந்த சூழலை அவை கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் சுமுக நிலைமையை உருவாக்க இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அரசு கேட்டுக் கொண்டது.

இலங்கை அரசின் பிரதிநிதியின் உரைக்குப் பிறகு பிறநாட்டுப் பிரதிநிதிகள் பேசினர். பங்களாதேஷ் உள்ளிட்ட சில நாடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவாகப் பேசினாலும் பல மேற்கத்தேய நாடுகள் இலங்கை அரசின் நிலைப்பாட்டை விமர்சித்தன.

வடக்கில் இராணுவப் பிரசன்னத்தை குறைக்க வேண்டும். உடனே தேர்தல்களை அங்கு நடத்த வேண்டும் என்று கனடா கூறியது.

கடந்த முறை மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வந்த முக்கிய சூத்திரதாரியான அமெரிக்காவோ இலங்கை செய்ய வேண்டியதை பட்டியலிட்டது.

இலங்கை 13-வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. (எ-11)

# மனிதவுரிமை...

சுதந்திரத்தின் மீது அச்சுறுத்தல், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது அழுத்தங்கள் என பல்வேறு வழிகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நீதிமன்றக் கட்டமைப்பில் அரசாங்க தலையீடு செய்யக்கூடாது.

நீதிமன்ற நியமனங்கள் தொடர்பில் நீதியானதும் வெளிப் படையானது மான ஓர் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

அகதிகளை மீள்குடியேற்றல், போர்வலய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல் போன்றன தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் வரவேற்கப் பட வேண்டியவை என அமெரிக்கா தெரிவித்துள்ளது. (எ-11)


## பணிப்பெண் தேவை

இரண்டு பேரை கொண்ட ஓர்குடும்பத்தில் சமையல் வேலை உட்பட வீட்டு, பணிகளை செவ்வன நிறைவேற்றகூடிய நற்பண்பு வாய்ந்த 36 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் உடனடியாகத் தேவை. (881)

தொடர்பு :- 0717454392

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா சட்ட ரீதியான ஆலோசனையின் இறுதிநாள் டிசெம்பர் 15 ஆகும்

* இலங்கைத்தீவின் பல பகுதிகளிலிருந்தும் மூவின மக்களும் மேற்படி ஆலோசனை செயற்திட்டத்தில் எம்மோடு இணைந்துகொண்டு பயன்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.
* எமது வரையறுக்கப்பட்ட ஆளணியினருடன் எமக்கு கிடைக்கப் பெற்ற அளவு கடந்த விண்ணப்பங்களை தயார்செய்ய கால அவகாசம் எமக்குத் தேவைப்படுகின்றது.
* இதன் காரணமாக 15.12.2012 அன்றுடன் மறு அறிவித்தல் வரை மேற்படி ஆலோசனைக்கு புதியவர்களை இணைத்துக் கொள்வதை நிறுத்திக் கொள்ள எமது கௌரவ இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது என்பதை பணிவடக்கத்துடன் அறியத்தருகின்றோம்.

G.T. உலகசேகரம் (பொதுமுகாமையாளர்)
இயக்குநர் சபைக்கட்டளைப்படி.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் (PV82703)
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016.



(C-1422)

## வழிகாட்டி

நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம் - 05.11.2012

- கிராம சேவையாளருக்கான போட்டி பரீட்சை விசேட வகுப்புகள் முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை ஆசிரியர் : த.தவசேகர்
- இலங்கை சட்டக்கல்லூரி (LAW COLLEGE) போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள் இது துறைபோந்த சட்டத்தரணிகளாலும் சட்ட விரிவுரையாளர்களாலும் நடத்தபடுகிறது.
- B.A. Social Work போட்டிப் பரீட்சை தயார்ப்படுத்தல்கள் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 100% வேலைவாய்ப்பைப் உறுதிப்படுத்தும் கற்கைநெறி)
- Markering Communication சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் துறைகளை நன்கு விளங்கிக் கொள்ளவும் சுயதொழில், தனியார் துறைகளில் இலகுவில் வேலை வாய்ப்பைப் பெற்று கொள்வதற்கான ஓர் கற்கை நெறி

பதிவுகள் ஆரம்பமாகி விட்டன
தொடர்புகளுக்கு: 0776699892, 0773867257
வழிகாட்டி முடக்காட்டு சந்தி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி

## சங்கானை வளர்பிறையின்
## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

காலம் : 02.11.2012 முதல் 10.11.2012 வரை

பெண்களுக்குரிய
கொட்டன் சாறி – ~~1400~~ – 650/=
சாதாரண சில்க் சாறி – ~~850~~ – 550/=
ஸ்கேட் – ~~700~~ – 400 /=
பிளவுஸ் – ~~500~~ – 250/=
கவுண் – ~~600~~ – 400/=

மற்றும் சல்வார் வகைகள், சாறிவகைகள், சல்வார் துணி வகைகள் அனைத்தும் எமது விற்பனை நிலையத்தில் மாபெரும் கழிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆண்களுக்குரிய
ரீசேட் – ~~850~~ – 550/=
ரவுசர் – ~~1400~~ – 650/=

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்

வளர்பிறை பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை
(874)

## 30 நாட்களில் ஆங்கிலம்

Spoken English (முழுமையான ஒருபயிற்சி பட்டறை)
அடிப்படை ஆங்கிலத்திலிருந்து கற்பிக்கப்படும்.

- English சரளமாக கதைப்பது உறுதி செய்யப்படும். (முடியாவிடின் Course Fee மீளளிப்பு செய்யப்படும்)
- ஆங்கிலத்தை ஆங்கிலச் சூழலில் கற்பிப்பதுடன் தேவையான விளக்கங்கள் மாத்திரம் தமிழில் வழங்கப்படும்.

Uk,Australia செல்லும் மாணவர்களுக்கான IELTS,A1,B1 தயார் படுத்தல்கள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றது.

- பாடசாலையை விட்டு விலகியோர், தொழில் எதிர்பார்ப்போருக்குரியது. [தொழில் செய்வோருக்கான காலை, மாலை மற்றும் இரவு நேர வகுப்புக்கள் நடைபெறும்]
- (Writing, Listening, Reading, Speaking ஆகிய ஒவ்வொரு பிரிவும் தனித்தனி அனுபவமிக்க Colombo ஆசிரியர்களால் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்படும் ஒருபிரிவில் 10 பேரும் மாத்திரமே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்துங்கள்)

தூர இட மாணவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரும் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை தொடருங்கள்.

**Electrical Wiring-** மின் இணைப்பாளர் (7 days)
**Plumbing-**நீர் குழாய் பொருத்துனர் (4 days)
**Computer Hardware Engineering-**கணணி திருத்துதல் (4 days)
**Mobile phone Reparing-**கையடக்கத் தொலைபேசி திருத்தல் (4days)

இக் குளிர்கால குறுங்கால பாடநெறிகள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படுவதுடன் நீங்கள் சுயமாக அல்லது நிறுவனங்களில் தொழில் புரிவது உறுதி செய்யப்படும்.

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P: 021 222 4728, 0777444225
Info@iiseees.lk
(C-1419)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... நேறு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org